REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2022 ஜூன் 24 வெள்ளிக்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

1932 - 2022

வரு. 90 இல. 147 | Friday 24, June, 2022 | 16பக்கங்கள் | 40/-

சட்டரீதியாக பணம் அனுப்பினால்

மின்சார வாகனம் வாங்க வாய்ப்பு

புலம்பெயர் பணியாளர்களுக்கு சந்தர்ப்பம்

புலம்பெயர் தொழிலாளர்கள் இலங்கைக்கு சட்ட ரீதியான வழிகளில் பணம் அனுப்பும் போது அவர்கள் அனுப்பும் தொகையின் அடிப்படையில் மின்சார வாகனங்களை இறக்குமதி செய்ய 06

நெருக்கடி நிலையிலிருந்து நாட்டை மீட்டெடுக்க

இலங்கைக்கு இந்தியா உச்சளவு ஒத்துழைப்பு

ஜனாதிபதியிடம் இந்திய தூதுக்குழு உறுதியளிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

நெருங்கிய நட்பு நாடு என்ற வகையில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையிலிருந்து மீள்வதற்காக இந்திய அரசாங்கம் இலங்கைக்கு உச்ச அளவு ஒத்துழைப்பை வழங்குமென இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் வினய் குவாட்ரா தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு தொடர்ந்தும் நிதி உதவிகளை வழங்குவது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் வினய் குவாட்ரா தலைமையிலான தூதுக்குழு நேற்று இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்தது.

இந்தியாவின் உதவிகளுக்கு இலங்கை அரசு மற்றும் மக்கள் சார்பில் ஜனாதிபதி நன்றி தெரிவிப்பு

இக்குழுவினர் கொழும்பு கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் நேற்று நண்பகல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை 06

இந்தியாவுடன் பலமான இருதரப்பு உறவு தொடரும்

இந்திய உயர்மட்டக் குழுவை சந்தித்தபின் பிரதமர் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

இந்திய தூதுக்குழுவுடன் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தை பயனுள்ளதாக அமைந்ததாகவும் இந்தியாவுடன் பலமான இருதரப்பு உறவுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கும் இந்திய வெளிவிவகார செயலாளர் வினய் குவாட்ரா 06

றோயல் பார்க் மரண தண்டனை குற்றவாளி விடுதலை சம்பவம்;

மைத்திரிக்கு எதிராக அத்துரலியே ரதன தேரர் CIDயில் முறைப்பாடு



பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரதன தேரர், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக குற்றவியல் விசாரணை திணைக்களத்தில் நேற்று முறைப்பாடு செய்துள்ளார்.

றோயல் பார்க் கொலை சம்பவத்தின் குற்றவாளிக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கியமை சம்பந்தமாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அண்மையில் வெளியிட்டிருந்த தகவலுக்கு எதிராக இந்த முறைப்பாட்டை செய்துள்ளதாக ரதன தேரர் கூறியுள்ளார்.

அண்மையில் சிங்கள தொலைக்காட்சி ஒன்றில் ஒளிப்பரப்பான நிகழ்ச்சியில் கலந்துக்கொண்ட முன்னாள் ஜனாதிபதி 06

40,000 மெ.தொன் ஏற்றிய கப்பல் வருகை தாமதம்

பெற்றோல் விநியோகம் இன்று மட்டுப்படுத்தப்பட்ட அளவில்

ஓரிரு தினங்களில் நிலைமை வழமைக்கு

லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்

இரண்டு எரிபொருள் கப்பல்கள் இன்றும் நாளையும் நாட்டை வந்தடையவுள்ளதாக மின்சக்தி, எரிசக்தி அமைச்சு தெரிவித்தது.

இன்றைய தினம் 40,000 மெற்றிக் தொன்னுடன் பெற்றோல் கப்பல் ஒன்றும் நாளைய தினம் டீசல் கப்பல் ஒன்றும் நாட்டை வந்தடையவுள்ளதாக மின்சக்தி எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் பெற்றோலுடன் 06

சுமார் 2000க்கும் மேற்பட்ட சுற்றிவளைப்பு

அதிக விலைக்கு அரிசி விற்ற 665 பேர் இதுவரை கைது

22 வழக்குகளில் 32 இலட்சம் ரூபா தண்டப்பணம்

லோரன்ஸ் செல்வநாயகம்

அரிசியை அதிகரித்த விலைக்கு விற்றமை மற்றும் பதுக்கி வைத்தல் உள்ளிட்ட முறைகேடுகள் தொடர்பில் 665 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

மேற்படி அதிகாரசபை நாடளாவிய ரீதியில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட சுற்றிவளைப்புகளை மேற்கொண்டுள்ளநிலையில் முறைகேடாக செயற்பட்டுள்ள 665 பேர் இதன்போது கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அதிகார சபையின் உயர் அதிகாரி ஒருவர் 06

தமிழக நிவாரண உதவிகள் சகலருக்கும் சமமாக கிடைக்கும்

எவ்வித பிரதேச பாகுபாடுகளுக்கும் இடமில்லை

அருள் சத்தியநாதன்

இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் நேற்று தெரிவிப்பு

தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான தமிழக அரசின் ஊடாகவும் தமிழக மக்கள் சார்பாகவும் இலங்கை மக்களுக்கு அனுப்பப்படும் அத்தியாவசிய உணவு வகைகள் நாட்டின் அனைத்து பகுதிகளுக்கும் கிடைக்குமென இ.தொ.கா. 06

வாகன இலக்கத்தகட்டின் அடிப்படையில் எரிபொருள்

மின்சக்தி அமைச்சு பரிசீலனை

அத்தியாவசிய சேவைகளுக்குள் உள்ளடங்காத வாகனங்களின் இலக்க தகட்டின் இறுதி இலக்கங்களுக்கு அமைய வாரநாட்களில் எரிபொருளை விநியோகிக்குமாறு முன்வைக்கப்பட்ட யோசனை தொடர்பிலான கலந்துரையாடல்கள் ஆரம்பமாகியுள்ளதாக மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி, இலக்க தகட்டில் 0,1, 2 ஆகிய இறுதி இலக்கங்களை கொண்ட வாகனங்களுக்கான எரிபொருளை திங்கள் மற்றும் வியாழக்கிழமைகளிலும் 3,4,5,6 இலக்கங்களை கொண்ட வாகனங்களுக்கு செவ்வாய் 06

சமூக வலைத்தளங்களில் அவதூறான படங்கள் பதிவேற்றம்

பெண்மை, தாய்மையை கொச்சைப்படுத்த வேண்டாம்

ஹிருணிக்காவுக்காக பிரதமர் வேண்டுகோள்

மூன்று பிள்ளைகளின் தாயான ஹிருணிகா பிரேமச்சந்திரவின் அநாகரீகமாக எடுக்கப்பட்ட புகைப்படங்களை வெளியிட வேண்டாம் என சமூக ஊடக ஆர்வலர்கள் மற்றும் பாவனையாளர்களிடம் பிரதமர் ரணில் விக்ரமசிங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஒழுக்கமான சமூகத்தில் தாய்மையை கொச்சைப்படுத்தப்படக் கூடாது. எல்லாவற்றிற்கும் 06

பாம்பு கடிக்கு மருந்தின்றி இதுவரை 20 பேர் மரணம்

டாக்டர் கிஷாந்த அதிர்ச்சி தகவல்

நாட்டில் பாம்பு விஷ தடுப்பு மருந்து இல்லாமையால் இதுவரையில் 20 பேர் வரையில் உயிரிழந்துள்ளதாக அகில இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் மருத்துவர் கிஷாந்த தசநாயக்க தெரிவித்துள்ளார்.

அடுத்த மூன்று வாரங்களுக்குள் மருத்துவமனைகளில் அத்தியாவசிய மருந்துகளுக்கும் கடுமையான தட்டுப்பாடு ஏற்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். 06

எரிபொருள் வரிசையில் மற்றுமொருவர் மரணம்

5 நாட்களாக டீசல் பெற நின்றாராம்

எரிபொருள் பெற்றுக் கொள்வதற்காக எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வரிசையில் காத்திருந்த மற்றும் ஒருவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஹொரண, அங்குருவதொட்ட, படகொட எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் வரிசையில் காத்திருந்த நபரொருவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்த 63 வயதான அவர், டீசல் பெறுவதற்காக சுமார் 05 நாட்களாக எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வரிசையில் காத்திருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

புலிகளுக்கு உதவிய இருவருக்கு தண்டனையை குறைத்தது சென்னை மேல் நீதிமன்றம் 03

டயர் தட்டுப்பாட்டால் 600 CTB பஸ்கள் இடைநிறுத்தம் 03

நாடுமுழுவதும் சேவையில் ஈடுபடமுடியாத நிலை

திருமணம் செய்து வைக்குமாறு இரு பெண்கள் கோரிக்கை 03

அக்கரைப்பற்று நீதிமன்றுக்கு வந்த விநோத வழக்கு

எரிபொருள் நிலையத்தில் பெண் அதிபர் அவமதிப்பு!

பிள்ளையுடன் போராட்டத்தில் குதித்ததால் பரபரப்பு

தமிழர் ஆசிரியர் சங்கம் கண்டனம் தெரிவிப்பு

கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் பெற்றுக் கொள்ள வந்த பெண் பதில் அதிபர் ஒருவர் தனது பிள்ளையுடன் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டார்.

அரச உத்தியோகத்தர்களுக்கு எரிபொருள் வழங்கப்படமாட்டாது என எரிபொருள் விநியோகத்தர்களால் அறிவுறுத்தப்பட்டது.

இந்த நிலையில் எரிபொருள் பெற்றுக்கொள்ள வந்த 06

முதல்வர் ஸ்டாலின் ரூ. 317 கோடி செலவில்

இலங்கை அகதிகளுக்காக தமிழகத்தில் வீட்டுத்திட்டம்

முதற்கட்டமாக தூத்துக்குடியில் ஆரம்பம்

திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது

தூத்துக்குடி, விளாத்திகுளம் அருகே தாப்பாத்தி இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் வசிக்கும் மக்களுக்கு தமிழக அரசு சார்பில் விரைவில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவுள்ளன.

இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிப்போருடன் அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் கலந்துரையாடி, தேவைகள் குறித்துக் கேட்டறிந்தார். தாளமுத்துநகர், மாசார்பட்டி, குளத்துவாய்பட்டியிலுள்ள இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களையும் ஆய்வு செய்தார்.

தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் ஆலோசனைப்படி 06

இலகுவாக கிடைக்கும் பொருட்களை பாவித்து

குறைந்த விலையில் பயோ டீசல் மற்றும் பெற்றோல்!

யாழில் ஆய்வுகூட உதவியாளர் விளக்கம்

இலகுவாக கிடைக்கும் பொருட்களை கொண்டு பயோ பெற்றோல் மற்றும் பயோ டீசல் என்பவற்றை குறைந்த விலையில் உற்பத்தி செய்ய முடியும் என யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆய்வு கூட உதவியாளர் தெரிவித்துள்ளார்.

நவாலியினை சேர்ந்த 06

ஆப்கான் பூகம்பம்:

மீட்புக் குழுவினர் பாதிப்புற்ற பகுதிகளை அடைவதில் சிரமம்

சர்வதேச உதவி கோரும் தலிபான்: உயிரிழப்பு அதிகரிக்கும் அச்சம்

தென் கிழக்கு பாகிஸ்தானில் 1000க்கும் அதிகமானோர் கொல்லப்பட்ட சக்தி வாய்ந்த பூகம்பத்தின் மீட்பு நடவடிக்கைகள் கடும் மழை, கரடுமுரடான நிலப்பரப்பு மற்றும் போதிய வளங்கள் இல்லாததால் பாதிக்கப்பட்டுள்ளன.

6.1 ரிச்டர் அளவில் கடந்த புதன்கிழமை பதிவான இந்த பூகம்பத்தை அடுத்து கட்டட இடிபாடுகளில் பலரும் சிக்கி இருப்பதாக அஞ்சப்படுகிறது. இங்கு பெரும்பாலும் சேற்று மண்ணாலேயே கட்டடங்கள் எழுப்பப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆப்கானின் சுகாதார கட்டமைப்பு முன்னர் இல்லாத அளவுக்கு வீழ்ச்சி கண்டிருக்கும் நிலையிலேயே இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

ஆப்கானில் ஆட்சியில் இருக்கும் தலிபான் நிர்வாகம் அதிக சர்வதேச உதவிகளை கோரியுள்ளது. தொலைத்தொடர்பு வலையமைப்புகளும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

“எம்மால் அந்தப் பகுதிகளை அடைய முடியாதிருக்கிறது. வலையமைப்புகள் மிக மோசமாக உள்ளன” என்று தலிபான் பேச்சாளர் ஒருவர் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

இதில் மோசமாக பதிக்கப்பட்ட பக்திகா மாகாணத்தின் தொலைதூர பகுதிகளுக்கு அவசர முகாம்கள் மற்றும் உணவு வழங்குவதில் ஐக்கிய நாடுகள் நிறுவனமும் சிரமத்தை எதிர்கொண்டுள்ளது.

இந்த பூகம்பத்தின் மையப் பகுதிக்கு அருகில் இருக்கும் கிராமங்கள் முற்றாக அழிந்துள்ளன. வீதிகள் மற்றும் தொலைபேசி கோபுரங்கள் சிதைந்து காணப்படுவதோடு உயிரிழப்பு மேலும் அதிகரிக்கக் கூடும் என்று உயிர் தப்பியவர்கள் மற்றும் மீட்பாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்த அனர்த்தத்தில் சுமார் 1,500 பேர் காயமடைந்திருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த இரண்டு தசாப்தங்களில் ஆப்கானில் இடம்பெற்றிருக்கும் அதிக உயிரிழப்புக் கொண்ட பூகம்பம் ஆட்சியில் இருக்கும் தலிபான்களுக்கு பெரும் சவாலாக மாறியுள்ளது. வெளிநாட்டு துருப்புகள் வெளியேறியதை அடுத்து தலிபான்கள் கடந்த ஆண்டு ஆட்சியை கைப்பற்றினர்.

கோஸ்ட் நகரில் இருந்து சுமார் 44 கிலோமீற்றர் தொலைவில் கடந்த புதன்கிழமை அதிகாலை ஏற்பட்ட இந்த பூகம்பத்தின் அதிர்வு பாகிஸ்தான் மற்றும் இந்தியாவிலும் உணரப்பட்டது.

ஆப்கான் ஏற்கனவே மனிதாபிமான மற்றும் பொருளாதார நெருக்கடியை சந்தித்திருக்கும் நிலையில் உதவி தேவைப்படும் மக்களுக்கு உதவி அளிப்பதற்கு அரசினால் முடியாதிருப்பதாக மூத்த தலிபான் அதிகாரியான அப்துல் கஹர் பல்கி குறிப்பிட்டுள்ளார். இந்த அனர்த்தம் தொடர்பில் தமது நிறுவனம் முழுமையாக அணிதிரட்டப்பட்டிருப்பதாக ஐ.நா தலைவர் அன்டொனியோ குட்டரஸ் தெரிவித்துள்ளார். பூகம்பம் ஏற்பட்ட பகுதிக்கு சுகாதார குழுக்கள், மருத்துவ விநியோகங்கள், உணவு மற்றும் அவசர முகாம்கள் அனுப்பப்பட்டிருப்பதாக ஐ.நா அதிகாரிகள் தெரிவித்தனர்.

எனினும் இரவு பெய்த கடும் மழையால் உணவுகள் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் மீட்பாளர்கள் அங்கு வர சிரமத்தை எதிர்கொண்டிருப்பதாகவும் பக்தியா மாகாணத்திற்கான தக வல்துறை தலைவர் முஹமது அமீன் ஹுதைபா தெரிவித்துள்ளார்.

பக்தியாவின் கயான் மற்றும் பர்மால் மாவட்டங்களிலேயே அதிகம் பேர் உயிரிழந்துள்ளனர். கயானில் கிராமம் ஒன்று முழுமையாக அழிந்துள்ளது.

“ஒரு சத்தம் கேட்டது. எனது படுக்கை குலுங்க ஆரம்பித்தது” என்று உயிர் தப்பிய ஷபீர் என்பவர் பி.பி.சி செய்தி நிறுவனத்திற்கு கூறினார். “உட்கூரை கீழே இடிந்து விழுந்தது. நான் சிக்கிக் கொண்டேன், ஆனால் என்னால் வானத்தைப் பார்க்க முடிந்தது. எனது தோள்பட்டை பெயர்ந்துவிட்டது, எனது தலையிலும் காயம் ஏற்பட்டது, ஆனால் என்னால் வெளியே வர முடிந்தது. என்னைப்போல் என்னுடன் ஒரே அறையில் இருந்த எனது குடும்பத்தின் ஏழு அல்லது ஒன்பது பேர் உயிரிழந்திருப்பார்கள் என்பது உறுதி” என்றும் அவர் குறிப்பிட்டார்.

பூகம்பத்தை அடுத்து தொலைபேசி கோபுரங்கள் சேதம் அடைந்திருப்பதால் பாதிக்கப்பட்ட பகுதிகளுடன் தொடர்பை ஏற்படுத்த முடியாதுள்ளது. உயிரிழப்பு எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கலாம் என்று அங்குள்ள ஊடகவியலாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

“தமது உறவினர்களின் நிலை குறித்து பலருக்கு தெரியாதுள்ளது. ஏனென்றால் அவர்களின் தொலைபேசிகள் செயற்பாடதுள்ளன. எனது சகோதரர் மற்றும் அவரது குடும்பத்தினர் உயிரிழந்துள்ளனர்.

இதனை பல மணி நேரத்திற்கு பின்னரே தெரிந்துகொண்டேன். பல கிராமங்களும் அழிந்துவிட்டன” என்று அவர் கூறியுள்ளார்.

இந்த பூகம்பத்தில் 3,000க்கும் அதிகமான வீடுகள் அழிந்துள்ளன. கடந்த புதன்கிழமை இரவு வரை பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து சுமார் 600 பேர் மீட்கப்பட்டிருப்பதாக பக்திகா மாகாண தலிபான்களின் மூத்த இராணுவ தளபதியின் செய்தித் தொடர்பாளர் முஹமது இஸ்மைல் முஆவியா குறிப்பிட்டுள்ளார்.

இதில் குறைந்தது 200,000 பேர் பாதிக்கப்பட்டிருப்பதாக செஞ்சிலுவைச் சங்கம் மதிப்பிடுகிறது.

சர்வதேச செய்திகள்

ஈக்வடோரில் ஆர்ப்பாட்டங்கள் தீவிரம்: பாதுகாப்பு நெருக்கடி

ஈக்வடோரின் புயோ நகரின் பாதுகாப்பை பொலிஸாரால் உறுதி செய்ய முடியவில்லை என்று அந்நாட்டு உள்துறை அமைச்சர் பட்ரிசியோ கரிலோ தெரிவித்துள்ளார்.

இந்த நகரில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற மோதல்களை அடுத்து பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டிருப்பதோடு ஆர்ப்பாட்டக்காரர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். 18 பொலிஸார் காணாமல்போயிருப்பதாக கரிலோ தெரிவித்தார்.

அரசின் பொருளாதார மற்றும் சமூகக் கொள்கைகளுக்கு எதிராக ஈக்வடோரில் கடந்த ஒன்பது நாட்களாக இடம்பெற்று வரும் மோதல்களிலேயே இந்த வன்முறை வெடித்துள்ளது.

இதன்போது எரிபொருள் விலையை குறைப்பது மற்றும் விவசாய பொருட்களுக்கு விலை வரம்பு நிர்ணயிப்பது உட்பட கோரிக்கைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் விடுத்துள்ளனர்.

ஈக்வடோரில் பணவீக்கம், வேலையின்மை மற்றும் ஏழ்மை நிலை அதிகரித்துள்ளது. 2020 தொடக்கம் டீசல் விலை இரட்டிப்பாகி இருப்பதோடு பெற்றோல் விலையும் அதிகரித்துள்ளது.

கொரோனா பெருந்தொற்று உச்சம் பெற்றிருந்தபோது ஈக்வடோர் அரசு மற்றும் சர்வதேச நாணய நிதியத்திற்கு இடையே 6.5 பில்லியன் டொலர் நிதிய பெறுவதற்கான பேச்சுவார்த்தை இடம் பெற்றது. இந்த நிதி இந்த ஆண்டின் பிற்பகுதியிலேயே கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஐரோப்பாவுக்கு எரிவாயு: ரஷ்யா முழுமையாக நிறுத்தும் அச்சம்

உக்ரைன் நெருக்கடியில் தனது அரசியல் செல்வாக்கை பலப்படுத்த ஐரோப்பாவுக்கான எரிவாயுவை ரஷ்யா முழுமையாக நிறுத்தக் கூடும் என்று சர்வதேச எரிசக்தி நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இதற்கு உக்ரைன் இப்போதே தயாராக வேண்டும் என்றும் அது அறிவுறுத்தியுள்ளது.

“ரஷ்யா தொடர்ந்து அங்கும் இங்கும் பல்வேறு சிக்கல்களைக் கண்டறிவதையும், ஐரோப்பாவுக்கு எரிவாயு விநியோகத்தை மேலும் குறைப்பதற்கான சாக்குகளைத் தொடர்ந்து தேடுவதையும் மறுக்க முடியாது. சிலவேளை அதனை முழுமையாக நிறுத்தக் கூடும்” என்று சர்வதேச எரிசக்தி நிறுவனத்தின் பணிப்பாளர் பாதிஹ் பிரோல் கடந்த புதனன்று வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

“இந்தக் காரணத்தால் ஐரோப்பாவுக்கு அவசரநிலை திட்டங்கள் தேவைப்படும்” என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியம் ரஷ்யாவின் எண்ணெய் மற்றும் நிலக்கரிக்கு தடை விதித்தபோதும் எரிவாயு இறக்குமதியை நிறுத்தவில்லை. ரஷ்ய எரிவாயுவில் ஐரோப்பா பெரிதும் தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தினகரன் வடக்கின் உதயம் Vadakkin Uthayam

யாழில் பிரதேச செயலாளர்களின் திடீர் அறிவிப்புக்களால் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் குழப்பங்கள்

யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாணத்தில் பிரதேச செயலாளர்களின் திடீர் அறிவிப்புக்களால் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன.

கல்வியங்காட்டு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் பெறுவதற்காக மக்கள் பல மணி நேரம் நீண்ட வரிசைகளில் காத்திருந்த வேளை, நல்லூர் பிரதேச செயலர், தமது பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு மாத்திரமே எரிபொருள் வழங்க வேண்டும் என எரிபொருள் நிரப்பு நிலையத்தினருக்கு பணித்திருந்தார். அதனால் அங்கு குழப்பம் ஏற்பட்டது.

நல்லூர் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு நேற்று முன்தினம் திருநெல்வேலி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் விநியோகிக்கப்பட்ட நிலையிலும் நேற்று கல்வியங்காட்டு எரிபொருள் நிரப்பு நிலையத்தினையும் பிரதேச செயலக உத்தியோகஸ்தர்களுக்கு ஒதுக்கியமையால் குழப்பங்கள் ஏற்பட்டன.

அதேவேளை கோப்பாய் பிரதேச செயலகத்தினரால் கோப்பாய் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அத்தியாவசிய சேவை பணியாளர்களுக்கு எரிபொருள் விநியோகிக்கப்படும் என அறிவித்தல் ஒட்டியமையால் குழப்பங்கள் ஏற்பட்டன.

குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மக்கள் நீண்ட நேரம் வரிசையில் காத்திருந்த வேளை குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அத்தியாவசிய சேவை பணியாளர்களுக்கு தான் எரிபொருள் விநியோகிக்கப்படும் என அறிவித்தல் ஒட்டப்பட்டமையால் குழப்பம் ஏற்பட்டு அறிவித்தல்களை மக்கள் கிழித்தெறிந்து குழப்பத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

குருந்தூர் மலை வழக்கு; முல்லைத்தீவு நீதிமன்றால் ஒத்தி வைப்பு

மாங்குளம் குறூப் நிருபர்

முல்லைத்தீவு நீதிமன்ற கட்டளையை மீறி குருந்தூர் மலையில் அமைக்கப்பட்ட விகாரை கட்டுமான பணி பொலிஸாரிடம் விளக்கம் கோரிய வழக்கு 30 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தமிழர்களின் பூர்வீக வழிபாட்டிடமான முல்லைத்தீவு தண்ணிமுறிப்பு, குருந்தூர் மலையில் கடந்த 12.06.2022 (ஞாயிறு) அன்று, 'கபோக்' கல்லினாலான புத்தர் சிலை ஒன்றினை அமைப்பதற்கும், அங்கு நீதிமன்ற கட்டளையை மீறி அமைக்கப்பட்ட விகாரையில் விசேட பௌத்த வழிபாடுகளை மேற்கொள்வதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அப்பகுதி தமிழ் மக்கள் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டதைத் தொடர்ந்து அந்த முயற்சிகள் கைவிடப்பட்டிருந்தன.

இந் நிலையில் குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலய நிர்வாகத்தினர் மற்றும், முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் ஆகியோர் 16.06.2022 தினம் குருந்தூர்மலை தொடர்பில் அனைவரும் இணைந்து மன்றில் நீதவானின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தனர். குருந்தூர்மலை தொடர்பான AR 673/18 என்ற குறித்த வழக்கு, மீண்டும் நேற்று (23) முல்லைத்தீவு நீதவான் நீதி மன்றில் முல்லைத்தீவு நீதவான் நீதி மன்ற நீதிபதி ரி.சரவணராஜா முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டபோது, இந்த வழக்கில் வருகை தந்த பொலிஸார் இது தொடர்பான பூரணமான விளக்கத்தை அளிப்பதற்கு முடியாத சூழ்நிலையில் இருப்பதாகவும் மேலதிகமாக தமக்கு விளக்கமளிப்பதற்கும் காலம் தேவை என கோரியிருந்தனர். இவர்கள் கூறிய கருத்துக்களுக்கு எதிர் கருத்துக்களும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த விடயங்களை அவதானித்த நீதவான், வழக்குத் தொடுனர் தரப்பான பொலிஸார் இந்த வழக்குத் தொடர்பாக தங்களுடைய நிலைப்பாடு தொடர்பில் மீள நீதிமன்றிலே பதில் கூறுவதற்காக, இந்த வழக்கு விசாரணைகளை 30 ஆம் திகதிக்கு ஒத்தி வைப்பதாக தெரிவித்தார்.

கனடா உதயன் பத்திரிகையின் ‘இலங்கைச் சிறப்பிதழ்’ பிரதிகள் தற்போது உலகெங்கும் உள்ள கலை இலக்கிய ஆர்வலர்களின் கரங்களில் உதயன் எழுத்தாளர்களால் கையளிக்கப்படுகின்றன. இந்த வகையில் மேற்படி இதழின் பிரதி ஒன்றை சென்னையில் தங்கியுள்ள கனடா எழுத்தாளர் வீணைமைந்தன் சென்னை மதுரா ட்ரவல்ஸ் பிரயாண முகவர் நிறுவன அதிபர் விகேடி. பாலனிடம் வழங்கினார்.
சென்னையில் பல பிரசுர நிறுவனங்களின் அதிபர்கள் எழுத்தாளர்கள் மற்றும் கனடா உதயன் நிறுவனத்தின் சென்னைப் பிரதிநிதிகள் ஆகியோரையும் சந்தித்து வரும் எழுத்தாளர் வீணைமைந்தன் அவர், கனடா உதயன் பத்திரிகையில் எழுதிய கட்டுரைகளைத் தொகுக்கும் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றார்.

உலக வங்கியின் நிதியுதவியில் கட்டப்படும் கல்வியங்காடு பொதுச்சந்தை தொகுதி கட்டுமானப் பணிகளை உலக வங்கியின் அதிகாரிகள் புதன்கிழமை பார்வையிட்டனர். இதன் போது வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் நிரஞ்சன், யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணன், யாழ் மாநகர ஆணையாளர் இ.த.ஜெயசீலன் உள்ளிட்ட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

படம் யாழ்.விசேட நிருபர்

எரிபொருள் தட்டுப்பாட்டால் பத்திரிகைகள் முடங்கும் அபாயம்

யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாணத்தில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக பத்திரிகைகள் முடங்கும் அபாயம் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. யாழ்ப்பாணத்தை தளமாக கொண்டு 3 பத்திரிகைகள் அச்சு பதிப்பாக வெளிவருகின்றன. எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக குறித்த பத்திரிகைகள் விநியோகத்தில் பெரும் சிக்கல்களை எதிர்கொண்டுள்ளன. பத்திரிக்கை விநியோக பணியில் ஈடுபடும் பணியாளர்கள் எரிபொருள் இன்மையால் சிரமங்களை எதிர்கொண்டுள்ளதால் விநியோக பணிகள் பாதிக்கப்படவுள்ளன. அதனால் பத்திரிகைகள் முடக்கும் அபாயத்தை எதிர்கொண்டுள்ளது. இது தொடர்பில் பத்திரிக்கை நிறுவன தலைவர்கள், ஆசிரியர் பீடத்தினர் வடமாகாண ஆளுநர் , மாவட்ட செயலர் ஆகியோருடன் கலந்துரையாடிய போதிலும் சாதகமான பதில்கள் கிடைக்கப்பெறவில்லை என தெரிவிக்கப்படுகிறது. அதேவேளை யாழில் மூன்று தொலைகாட்சி நிறுவனங்கள், வானொலி சேவைகள் என்பன உள்ளடங்கலாக 10 க்கும் மேற்பட்ட ஊடக நிறுவனங்கள் உள்ளன. அவற்றில் பணியாற்றும் ஊடகவியலாளர்கள் ஊடக பணியாளர்கள் என பலரும் எரிபொருள் தட்டுப்பாட்டினால் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.அதேபோன்றுயாழில் இருந்து கொழும்பில் உள்ள ஊடக நிறுவனங்களில் பணியாற்றும் ஊடகவியலாளர்களும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 ஜூன் 24 வெள்ளிக்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

தொழுகை நேரம்

21 முதல் 25 வரை

சுபஹ்	04.33
லுஹர்	12.14
அஸர்	03.41
மஃரிப்	06.29
இஷா	07.45

இன்றைய சுபதினம்

சுபகிருது வருடம் சித்திரை 5

ராகுகாலம்	பகல்	1.30	3.00வரை
சுபநேரம்	காலை	10.30	12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

இராசி பலன்கள்

மேஷம்	செலவு
ரிஷபம்	பாராட்டு
மிதுனம்	தனம்
கடகம்	போட்டி
சிம்மம்	கோபம்
கன்னி	முயற்சி
துலாம்	நன்மை
விருச்சிகம்	நிறைவு
தனுசு	வெற்றி
மகரம்	பொறுமை
கும்பம்	மறதி
மீனம்	சுகம்

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள்
(பாபு சர்மா)

பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் ஜனாதிபதியுடன் சந்திப்பு

இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த வேண்டிய நேரம் வந்துவிட்டது. இதன் மூலம் ஆடை, விவசாயம், சுகாதாரம் மற்றும் முதலீடு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் முன்னேற்றம் ஏற்படுமென இலங்கைக்கான பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் தாரிக் அரிபுல் இஸ்லாம் (Tareq Ariful Islam) நேற்று தெரிவித்தார்.

நேற்று (23) பிற்பகல் கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்த போதே உயர்ஸ்தானிகர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

2022 இரு நாடுகளுக்குமிடையிலான இராஜதந்திர உறவுகளுக்கு 50 ஆண்டு பூர்த்தியாகிறது. இந்த காலகட்டத்தில், இரு அரசாங்கங்களும் மிகவும் நெருக்கமாகவும் இணக்கமாகவும் செயற்பட முடிந்தது. தற்போதைய பொருளாதார நெருக்கடியில் பங்களாதேஷ் வழங்கும் ஒத்துழைப்பை ஜனாதிபதி பாராட்டினார். வர்த்தகம், சுற்றுலா மற்றும் கல்வி ஆகிய துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான

06

டயர் தட்டுப்பாட்டால் 600 CTB பஸ்கள் இடைநிறுத்தம்

நாடு முழுவதும் சேவையில் ஈடுபடமுடியாத நிலை

வாகனங்களுக்கான டயர் தட்டுப்பாடு காரணமாக நாடு முழுவதும் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான சுமார் 600 பேருந்துகள் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளன.

விநியோக நிறுவனங்கள், டயர்களுக்கு அதிக விலையினை கோருவதால், பேருந்துகள் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள இலங்கை போக்குவரத்து சபையின் பிரதிப் பொதுமுகாமையாளர் , டயர்கள் கிடைப்பதில் தொடர்ந்தும் தாமதம் நிலவுவதாக தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தனியார்

06

புலிகளுக்கு உதவிய இருவருக்கு

தண்டனையை குறைத்தது சென்னை மேல் நீதிமன்றம்

ஏழு ஆண்டுகளாக குறைத்து விடுதலை

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு புத்துயிர் அளித்து இலங்கையில் தாக்குதல் நடத்த சதி செய்ததாகக் கூறப்படும் இரண்டு இலங்கையர்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனையை சென்னை மேல் நீதிமன்ற மதுரைக் கிளை நேற்று குறைத்துள்ளது.

இந்தியாவை விட்டு வெளியேறுவதாகவும், சட்டம் ஒழுங்கு பிரச்சினையில் ஈடுபடமாட்டோம் என்றும் அவர்கள், வழங்கிய உறுதிமொழியை அடுத்து நீதிமன்றம் இந்த தண்டனை குறைப்பை வழங்கியுள்ளது.

கிருஷ்ணகுமார் மற்றும் சுபாஸ்கரன் ஆகியோருகே இந்த தண்டனை குறைப்பு வழங்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்பட்ட நிலையில் ஏற்கனவே அவர்கள் 6 வருடங்கள் மற்றும் 10 மாதங்களை சிறையில் கழித்துள்ளனர்.

இந்தநிலையில் மொத்த தண்டனையை சென்னை

06

பால் உற்பத்தி, விவசாய கைத்தொழில் அபிவிருத்திக்கு நியூஸிலாந்தின் உதவி

G.L.பீரிஸ் நியூஸிலாந்து அமைச்சரிடம் கோரிக்கை

இலங்கையின் பால் உற்பத்திக் கைத்தொழில் மற்றும் விவசாயம் சார்ந்த கைத்தொழில்களின் அபிவிருத்தி தொடர்பில் நியூசிலாந்தின் உதவியை இலங்கை வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் கோரியுள்ளார்.

ருவாண்டாவின் கிகாலியில் நடைபெறும் பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்ற வெளிநாட்டமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், நியூசிலாந்தின் வெளிநாட்டலுவல்கள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் நனையா மஹூதாவை சந்தித்து பேச்சு நடத்தினார். இதன் போதே அவர் இவ்வாறான கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

தற்போது கொழும்பில் சர்வதேச நாணய நிதியத்துடன் நடைபெற்று வரும் பணியாளர் மட்டக் கலந்துரையாடல்கள் மற்றும் உணவு, எரிபொருள், மருந்து விநியோகம் தொடர்பாக இருதரப்பு நன்கொடையாளர்கள் மற்றும் பல தரப்பு நிறுவனங்களிடமிருந்து நாடு பெற்றுக் கொள்ளும் ஆதரவு குறித்து வெளிநாட்டமைச்சர் பீரிஸ், நியூசிலாந்தின் வெளிநாட்டமைச்சரிடம் விளக்கினார்.

அடுத்த சில வாரங்களில் நிதியைக் கட்டுப்படுத்துவதன் முக்கியத்துவத்தை அவர் சுட்டிக் காட்டினார். நியூசிலாந்து மற்றும் பொதுநலவாய நாடுகளின் ஆதரவு தொடர்பில் ஆராய்வதற்கு நியூசிலாந்து வெளிநாட்டமைச்சர் ஒப்புக்கொண்டார்.

இலங்கையின் பால் உற்பத்திக் கைத்தொழில் மற்றும் விவசாயம் சார்ந்த கைத்தொழில்களின் அபிவிருத்தி தொடர்பில் நியூசிலாந்தின் உதவியை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பீரிஸ் கோரினார்.

06

திருமணம் செய்து வைக்குமாறு இரு பெண்கள் கோரிக்கை

அக்கரைப்பற்று நீதிமன்றுக்கு வந்த விநோத வழக்கு

உளநல மருத்துவரிடம் அழைத்துச்சென்று அறிக்கை சமர்ப்பிக்க நீதவான் உத்தரவு

பாலமுனை தினகரன் நிருபர்

இந்தியாவிலிருந்து வந்த பெண் ஒருவர் ஒரு குழந்தையின் தாயான அக்கரைப்பற்று பெண் ஒருவரை திருமணம் செய்து வைக்குபடி கூறியதையடுத்து இரு பெண்களையும் உள நல மருத்துவரிடம் காண்பித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அக்கரைப்பற்று பெண்ணின் தந்தை பொலிஸில் செய்த முறைப்பாட்டையடுத்து அக்கரைப்பற்று நீதிமன்றத்தினால் இரு பெண்களையும் இவ்வாறு உல நல மருத்துவரிடம் காண்பித்து அறிக்கையை சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது, கடந்த திங்கட்கிழமை (20)இந்தியாவிலிருந்து அக்கரைப்பற்றுக்கு தனது நண்பியை தேடி பெண் ஒருவர் வந்துள்ளார். தாங்கள் இருவரும் நண்பிகளாக தொலைபேசி மூலம் உரையாடி வந்ததாகவும் தற்போது திருமணம் செய்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ளதாகவும் அந்த பெண்கள் கூறியுள்ளனர்.

இதனையடுத்து அக்கரைப்பற்று பெண்ணின் பெற்றோர் பொலிஸில் முறைப்பாடு செய்ததையடுத்து அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் இரு பெண்களையும் புதன்கிழமை நீதவான் எம்.எச்.எம்.ஹம்ஸா முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

இருவரது விளக்கங்களையும் கேட்ட நீதிபதி இருவரும் திருமணம் செய்யக் கோரியதால் இருவரையும் கல்முனை வடக்கு வைத்தியசாலையின் உளநல மருத்து நிவுணரிடம் காண்பித்து அதன் அறிக்கையை எதிர்வரும் 27ஆம் திகதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார்.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் இந்தியாவில் திருமணம் செய்துள்ள நண்பி ஒருவர் மூலம் தொலைபேசியூடாக இந்திய பெண்ணின் தொடர்பு ஏற்பட்டதாகவும் அக்கரைப்பற்று பெண் கூறினார்.

"உனக்கு திருமணமாகி ஒன்றரை வயது மகளும் கணவரும் இருக்கின்றனர். இந்நிலையில் நீ ஏன் இந்தப் பெண்ணை திருமணம் முடிக்க வேண்டும்" என அக்கரைப்பற்று பெண்ணின் தந்தை தனது மகளிடம் கேட்டுள்ளார்.

"அந்தப் பெண்ணை திருமணம் முடிக்க விரும்புகிறேன். அவளுடன் வாழ ஆசைப்படுகிறேன். அவளை திருமணம் செய்து இந்தியாவுக்கு செல்ல விரும்புகிறேன்" மகள் தன் தந்தையிடம் கூறியுள்ளார்.

தமிழ் நாட்டைச் சேர்ந்த பெண் தனது நண்பி மூலமாக அறிமுகமாகி தொலைபேசி, வட்ஸ் ஆப் ஊடாக பேசி வந்ததாகவும் இருவரும் திருமணம் செய்வதற்கு இணங்கிக் கொண்டதாகவும் அதன் பின் அவரை இந்தியாவுக்கு அழைத்ததாகவும் இலங்கையில் தற்போது கடவுசீட்டு பெறமுடியாத நிலை இருப்பதால் இலங்கைக்கு வருமாறு அவர் அந்தப் பெண்ணை அழைத்ததாகவும் கூறியுள்ளார். இந்திய பெண் கடந்த 20 ஆம் திகதி இலங்கை வந்ததாகவும் தான் அவளை திருமணம் முடிக்க விரும்புவதாகவும் தனது வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளார்.

இந்நிலையிலேயே இரு பெண்களையும் உள நல நிபுணரிடம் ஒப்படைக்க நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

ஹம்பாந்தோட்டை துறைமுகம் :

99 வருட குத்தகை மூலம் பெறப்பட்ட நிதியில் கடன் செலுத்தப்படவில்லை

கோப் குழுவில் தகவல்

லோரன்ஸ் செல்வநாயகம்

ஹம்பாந்தோட்டை துறைமுகம் 2017ஆம் ஆண்டு 99 வருடத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போதும் அந்த நிதியின் மூலம் துறைமுகத்தை நிர்மாணிப்பதற்காக பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள கடனை செலுத்தத் தவறியுள்ளதாகவும் அரசாங்கத்தின் வேறு நடவடிக்கைகளுக்கு திறைசேரி அந்த நிதியை செலவிட்டுள்ளதாகவும் கோப் குழுவில் தெரியவந்துள்ளது.

அதேவேளை ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை நிர்மாணிப்பதற்காக பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள வெளிநாட்டுக் கடன் தொகை சம்பந்தமாக அரசாங்கத்தின் எந்தவொரு கணக்குப் பதிவிலும் தகவல்கள் இதுவரை காணப்படவில்லையென்றும் கோப் குழு தெரிவித்துள்ளது.

துறைமுக அதிகார சபை ஊழியர்களுக்காக 2021ஆம் ஆண்டு மேலதிக நேரக் கொடுப்பனவுகளை வழங்குவதற்காக 585 கோடி வழங்கப்பட்டுள்ளதாகவும் கோப் குழுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் 117 கோடி ரூபா மேலதிக ஊழியர்கள் காணப்படும் பிரிவுகளில் ஊழியர்களுக்காக வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

2019, 2020 வருடங்களின் துறைமுக அதிகார சபையின் கணக்காய்வாளர் அறிக்கையில் இந்தத் தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், அதனை பரிசீலனை செய்வதற்காக கோப் குழு அதன் தலைவர் பேராசிரியர் சரித ஹேரத் தலைமையில் நேற்று முன்தினம் கூடிய வேளையிலேயே இந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. அதன்போது ஊழியர்களுக்கு மேலதிக நேரக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு சாதாரண முறைமை ஒன்றை தயாரிக்குமாறு கோப் குழுவின் தலைவர் துறைமுக அதிகார சபைக்கு பரிந்துரை செய்துள்ளார். ஹம்பாந்தோட்டை துறைமுகம் 2017ஆம் ஆண்டு குத்தகைக்கு வழங்கப்பட்ட

06

வரக்காபொல எரிபொருள் நிலையத்தில்

பொலிஸ் அதிகாரியை தாக்கிய இராணுவ அதிகாரி கைது

வரக்காபொல பிரதேசத்தில் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடமையிலீடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரிக்கும் இராணுவ அதிகாரிக்குமிடையில் மோதல் இடம்பெற்றுள்ளது.

வரகாபொல தும்மலதெனிய பிரதேசத்திலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவ அதிகாரி ஒருவருக்கும் பொலிஸ் உத்தியோகத்தருக்குமிடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

அப்போது இராணுவ அதிகாரி மற்றும் பொலிஸ் உத்தியோகத்தருக்கு இடையே மோதல் ஏற்பட்டது.

இராணுவ அதிகாரியினால் தாக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் வரக்காபொல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தாக்குதல் சம்பவம் தொடர்பில் இராணுவ அதிகாரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். அவரை நேற்று வரகாபொல நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

ST&IS SINCE 1892
FINTREX finance

பின்ட்ரெக்ஸ் பினான்ஸ் லிமிட்டெட்
மாபெரும் ஏல விற்பனை

70 டீசல் மற்றும் பெற்றோல் வாகனங்கள்
2022 ஜூன் 27 திங்கள்
இல. 346, மானெல் வத்த, பொலேகொட,
கோணவல, களனி
என்ற முகவரியில்
காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகும்.

விபரம்:
மோட்டார் கார்கள்:

NW CAX-XXXX	சுசூகி வெகன் R	2017
SG CAQ-XXXX	மயிக்ரோ பென்டா	2016
WP KS -XXXX	டாட்டா நனோ	2011
WP KD -XXXX	KIA ரியோ	2003
WP KH -XXXX	மொன்டேரோ	2003
WP GQ -XXXX	நிஸான் செபிரோ	1999
251 - XXXX	நிஸான் செரினா	1993

வேன்:

57 - XXXX	மஸ்டா	1990

சிறிய டிரக்குகள்/பிரீஸர் டிரக்குகள்/டிரக்டர்கள்:

NW RE -XXXX	நியூ ஹொலன்ட் டிரக்டர்	2016
SG PY -XXXX	மஹிந்ரா மெக்ஸிமோ பிளஸ்	2014
WP PV -XXXX	மஹிந்ரா மெக்ஸிமோ பிளஸ்	2013
CP LN -XXXX	இசுசு எல்ப் (பிரீஸர்)	2011

மோட்டார் கோச்சுகள்:

SP NG -XXXX	நிஸான் டீசல்	2016
SP ND -XXXX	மிட்சுபிஷி ரோசா	2010
SG ND -XXXX	டாட்டா ஸ்டார்	2010
WP NB -XXXX	நிஸான் சிவிலியன்	2007
SG NA -XXXX	அசோக் லேலன்ட்	2005
WP JF -XXXX	டாட்டா	2004
61 - XXXX	டொயோட்டா ஹைஏஸ்	1992

முச்சக்கர வண்டிகளும் மோட்டார் சைக்கிள்களும்
பஜாஜ் 4 ஸ்ரோக் மற்றும் 2 ஸ்ரோக் / TVS கிங் / பியாஜியோ Ape முச்சக்கர வண்டிகள்
அப்ரிலியா பஜாஜ் CT100 / ஹீரோ டேஷ் / ஹீரோ டெஸ்ரினி / ஹீரோ மெஸ்ட்ரோ எட்ஜ்
ஹீரோ பிலஷர் / ஹொண்டா டியோ
ஹொண்டா நவி / ஹொண்டா ரிவிஸ்டர் / யமஹா ரே ZR

பார்வையிடல் - ஏல விற்பனை நடைபெறும் ஸ்தலத்தில்
2022 ஜூன் 25 சனி மற்றும் 26 ஞாயிறு ஆகிய தினங்களில்
(காலை 9.00 முதல் மாலை 5.00 மணி வரை)

விற்பனை நிபந்தனைகள்
- நுழைவு: ஏல விற்பனை நடைபெறும் தினத்தில், ஒவ்வொருவரும் பிரவேசக் கட்டணமாக மீளளிக்கப்படாத ரூபா 1000/- செலுத்துவதுடன், மீளச் செலுத்தப்படும் ரூபா 25,000/- ஐ வைப்புச் செய்தலும் வேண்டும்.
- கொடுப்பனவுகள்: விற்பனை முடிவின் போது, மொத்தத் தொகையில் மீளளிக்கப்படாத 25% காசாகச் செலுத்தப்படல் வேண்டும். எஞ்சிய 75% ஐயும் 2022 ஜூன் 29 ஆந் திகதி புதன்கிழமை பி.ப 3.00 மணிக்கு முன்னர், கொழும்பு 07, தர்மபால மாவத்தை, இல. 101 என்ற முகவரியில் அமைந்துள்ள பின்ட்ரெக்ஸ் பினான்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தில் காசாகச் செலுத்தப்படுவதோடு, அன்றைய தினமே வாகனத்தையும் அங்கிருந்து அகற்ற வேண்டும்.
- எவ்வித முன்னறிவித்தலுமின்றி எந்தவொரு வாகனத்தையும் ஏல விற்பனையிலிருந்து விடுவித்துக் கொள்ளும் உரிமை முகாமைத்துவத்திற்கு உண்டு.
- ஏலதாரரின் தீர்ப்பே இறுதி முடிவாகும்.

ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம®
ஒரே தேசம், ஒரே ஏலவிற்பனையாளர்

தலைமை அலுவலகம்:
24, டொரிங்டன் வீதி, கண்டி
தொலைபேசி: 081-2227593
தொலை/.பக்ஸ்: 081-2224371
மின்னஞ்சல்: schokmankandy@sltnet.lk

நகர அலுவலகம்:
6A, பெயார் பீல்ட் கார்ட்ன், கொழும்பு 8
தொலைபேசி: 011-2671465, 011-2671468
தொலை/.பக்ஸ்: 011-2671469
மின்னஞ்சல்: schokman@samera1892.com

CELEBRATING 125 Years

011 2671468
www.sandslanka.com

தினகரன்
THINAKARAN
திகைரன்
35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321
சுபகிருது வருடம் ஆனி மாதம் 10ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 துல்கஃதா பிறை 23

குறள் தரும் சிந்தனை

எற்றென்று இரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று

என்ன இப்படிச் செய்து விட்டோமே என்று வருந்தும்படியான செயல்களைச் செய்யாது விடுக; ஒருவேளை தவறாகச் செய்து விட்டால், திரும்பவும் அதைச் செய்யாது இருப்பது நல்லது.

குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு நிவாரணம் வழங்கும் விசேட திட்டம்

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி நாட்டின் எல்லா மட்டத்திலுள்ள மக்களதும் வாழ்வில் தாக்கங்களையும் பாதிப்புக்களையும் ஏற்படுத்தியுள்ளது. இந்நெருக்கடியானது மக்களை மன உளைச்சலுக்கும் உட்படுத்தி இருக்கின்றது.

அந்நிய செலாவணி பற்றாக்குறையினால் தோற்றம் பெற்றுள்ள இப்பொருளாதார நெருக்கடியின் விளைவான பொருட்களின் விலையேற்றமும் எரிபொருள் மற்றும் எரிவாயு தட்டுப்பாடும் இதற்கு அடிப்படையாக உள்ளன. இப்பொருளாதார நெருக்கடி மக்களுக்கு தாக்கமாகவும் பாதிப்பாகவும் மாத்திரமல்லாமல், சுமையாகவும் அமைவதைத் தவிர்ப்பதில் விஷேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதன் நிமித்தம் பல்வேறு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளன.

இவ்வாறான நிலையில் பொருளாதார கஷ்டங்களுக்கு முகம் கொடுத்துள்ள மக்களுக்கு பண ரீதியில் நிவாரணம் அளிக்கும் திட்டமொன்றை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் குறைந்த வருமானம் பெறும் 33 இலட்சம் குடும்பங்களுக்கு இந்த நிவாரணக் கொடுப்பனவை வழங்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இதன்படி, 'இம்மாதம் முதல் அடுத்து வரும் ஆறு மாதங்களுக்கு மாதா மாதம் ரூபா 5000.00 வீதம் நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்படும்' என்று குறிப்பிட்டுள்ள பெண்கள், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் செயலாளர் நீல் பண்டார, 'இத்திட்டத்திற்கென உலக வங்கியும் ஆசிய அபிவிருத்தி வங்கியும் நிதியுதவி வழங்கியுள்ளன' எனக் கூறியுள்ளார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியின் பல்வேறு விதமான அசௌகரியங்களுக்கும் முகம் கொடுத்துள்ள மக்களுக்கு இது ஒரு ஆறுதலான நடவடிக்கையாக அமையும். அதேநேரம் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் மக்களின் நலன்கள் குறித்தும் கவனம் செலுத்திய படி செயற்பட்டுக் கொண்டிருப்பதை அரசாங்கம் மீண்டும் உறுதிப்படுத்தி உள்ளது.

இந்நாடு முகம் கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடியினால் பணவீக்கம், எரிபொருள் மற்றும் எரிவாயு பற்றாக்குறை, பொருட்களின் விலையேற்றம் என்பன பெரிதும் அதிகரித்து காணப்படுகின்றன. இதனால் நாட்டின் அனைத்து மட்டங்களையும் சேர்ந்த மக்கள் பலவிதமான அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்த வண்ணமுள்ளனர். பலர் தொழில் வாய்ப்புக்களை இழந்திருக்கின்றனர். அன்றாட உணவுக்காக பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுத்துள்ளவர்களும் சமூகத்தில் இருக்கவே செய்கின்றனர்.

என்றாலும் இவ்விதமான நெருக்கடிகளுக்கு மக்கள் உள்ளாவதைத் தவிர்ப்பது தொடர்பில் ஆரம்பம் முதல் விஷேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டு பலவாறான வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில்தான் தற்போது இந்த நிதி கொடுப்பனவு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அதேநேரம், 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடுப்பகுதியில் நாட்டில் கொவிட் 19 தொற்று பதிவாகத் தொடங்கியது. அதன் காரணத்தினால் இத்தொற்றின் பரவுதலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் நாடு முழுமையாக முடக்கப்பட்டது. இதன் விளைவாக குறைந்த வருமானம் பெறுபவர்கள் பொருளாதார நெருக்கடிக்கு அன்றும் முகம் கொடுத்தனர். அச்சமயமும் மக்களின் நலன்கள் குறித்து கவனம் செலுத்திய அரசாங்கம், குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு அன்றும் மாதாமாதம் ரூபா 5000.00 வீதம் கொடுப்பனவு பெற்றுக் கொடுத்தது. முதல் இரண்டு மாதங்களும் நாடெங்கிலுமுள்ள குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு இக்கொடுப்பனவு வழங்கப்பட்ட போதிலும், அதன் பின்வந்த காலப் பகுதியில் அந்தந்தப் பிரதேசங்களில் கொவிட் 19 தொற்று பரவுதல் கட்டுப்பாட்டுக்காக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் அடிப்படையில் இக்கொடுப்பனவு பெற்றுக் கொடுக்கப்பட்டது.

இவ்வாறு குறைந்த வருமானம் பெறும் மக்களின் நலன்கள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு சூழலில் தற்போது இந்நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு இருக்கின்றது. தற்போதைய சூழலில் இது பெரிதும் வரவேற்கப்பட வேண்டிய திட்டமாகும்.

ஆகவே பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெறுவதற்கும் இந்நெருக்கடி மக்களுக்கு சுமையாக அமைவதை தவிர்ப்பதற்கும் அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கப்பட வேண்டும். அது நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி கட்சி நலன்களுக்கு அப்பாலானதாக அமைய வேண்டும். பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெற பேதங்களுக்கு அப்பால் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

மக்கள் மனம் கவர்ந்த வசந்தம் ரி.வி நாளை 13ஆவது அகவையில் காலடி

வாழ்வின் வசந்தமாய் இலங்கை மக்களுக்கு தனது அர்ப்பணிப்பான சேவையை ஆற்றி, தொலைக்காட்சி வரலாற்றில் தனக்கென தனி இடத்தைப்பிடித்து இன்று வரைக்கும் மக்கள் மனதில் நீங்காத இடத்தைப் பிடித்திருக்கும் வசந்தம் தொலைக்காட்சி நாளை (25.06.2022) தன்னுடைய 13வது அகவையில் கால் பதிக்கிறது.

ஒரு தசாப்தத்தைக் கடந்து இலங்கை மக்களுடைய வாழ்க்கையிலும் அவர்களுடைய செயற்பாட்டிலும் முற்றுமுழுதாக தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ள தொலைக்காட்சியாக வசந்தம் தொலைக்காட்சி காணப்படுகிறது.

கடந்த காலத்தில் இலங்கையில் நிலவிய அசாதாரண வேளைகளிலும் கூட தொடர்ச்சியாக மக்களோடு மக்களாக நின்று அவர்களுடைய தேவைகளை, குறைநிறைகளை அறிந்து முடிந்த அளவுக்கு சமூக சேவை செய்த தொலைக்காட்சியாக பரிணமித்த வரலாற்றை இலங்கை மக்கள் நன்கறிவர். 2022 ஆம் ஆண்டு பிறந்தது முதற்கொண்டு இன்றுவரை நிலவுகின்ற மிகவும் இக்கட்டான சூழ்நிலையை நாடு மட்டுமன்றி ஒட்டுமொத்த மக்களும் அனுபவித்து வருகின்றனர்.

முழுநாடும் எரிபொருள் தட்டுப்பாடு, வேலையில்லாப் பிரச்சினை, பொருளாதாரப் பிரச்சினை என்று எண்ணிலடங்காத பல பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளது. ஒவ்வொருவரும் தங்களுடைய வாழ்க்கையை சிரமத்துடன் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இப்படியான காலகட்டத்திலும் கூட ஒரு அரச தொலைக்காட்சி என்ற வகையில் இன்று வரைக்கும் பல சமூக சேவைகளை இலங்கை மக்களுக்கு வழங்கி கொண்டு வருகின்றது வசந்தம் தொலைக்காட்சி. எனவே வசந்தம் தொலைக்காட்சி மக்களின் தொலைக்காட்சி என்பதே சரியான பதமாகும்.

எஸ். கோணேஸ்வரராஜா
(முகாமையாளர் வசந்தம் ரி.வி)

ரசிகர்களிடையே ஏகோபித்த வரவேற்பு காரணமாக இன்று வரைக்கும் இலங்கை மக்களுடைய வாழ்க்கையில் தவிர்க்க முடியாத ஒரு அலைவரிசையாக வசந்தம் பரிணமிக்கின்றது. மேலும் பல சமூக ஊடகங்களின் வரவிலும் கூட அதற்கு ஈடுகொடுத்து அதற்கேற்ப தன் சேவையை விஸ்தரித்து வியாபித்து ஒவ்வொரு ரசிகர் மனதிலும் நீங்கா இடம்பிடித்துள்ளது வசந்தம் டிவி.

எனவே மென்மேலும் இன்னும் பல தரமான நிகழ்ச்சிகளை எதிர்காலத்திலும் வழங்குவதற்கு வசந்தம் தொலைக்காட்சி தயாராகவே இருக்கின்றது. இலங்கையில் இருக்கும் பல தனியார் தொலைக்காட்சிகளோடு போட்டி போட்டுவது மட்டுமில்லாமல் தரவரிசையிலும் முன்னணியாகத் திகழ்கின்றது.

எனவே தொடர்ச்சியாக உங்களுடைய அன்பையும் ஆதரவையும் எப்பொழுதும் நல்குவீர்கள் என்ற நம்பிக்கையுடன் இந்த 13 ஆவது ஆண்டிலும் நாங்கள் கால் பதிக்கிறோம். என்றும் எங்களோடு தோள்கொடுத்து இருக்கக் கூடிய எங்களுடைய அதி பெறுமதியான தொலைக்காட்சி ரசிகர்கள் எம் விளம்பரதாரர்கள் மற்றும் எங்களுடைய நலன் விரும்பிகள் அனைவருக்கும் இந்த வேளையில் நாங்கள் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம்.

வசந்தம் TV

தினேஷ் சுந்தர்...

தம்பலகாமம் இளைஞரை காட்டுக்குள் துரத்திய கரடி!

உயிர் தப்புவதற்காக மரத்தில் ஏறிக் கொண்டவர் மூன்று நாட்களின் பின்னர் இராணுவம், பொலிஸ் தேடுதலில் மீட்பு!

இரவு முழுக்க காட்டு விலங்குகளின் பயங்கர ஒலி; அச்சத்துடன் கழிந்த இரவுகள்!

காட்டில் தன்னைத் துரத்தி வந்த பெரிய கரடி ஒன்றிடமிருந்து தப்புவதற்காக இளைஞர் ஒருவர் ஓடிச் சென்று மரத்தில் ஏறியுள்ளார். ஆனால் கரடி அந்த இடத்தை விட்டு நகரவில்லை. அக்கரடி அங்கிருந்து செல்லும் வரை மூன்று நாட்களை மரத்திலேயே கழித்த அந்த இளைஞரை பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து இரண்டு நாட்கள் தேடுதல் மேற்கொண்டு நண்பகல் வேளையில் கண்டுபிடித்துள்ளார்கள்.

இவ்வாறு காட்டில் காணாமல் போய் கண்டுபிடிக்கப்பட்டவர் திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகாமம் 10 ஆம் கொலனியைச் சேர்ந்த சாகுல் ரிஸ்வான் எனப்படும் 22 வயது திருமணமான இளைஞராவார். தம்பலகாமம் ஈச்சங்குளம் காட்டுப் பகுதியில் மாடுகளை வளர்க்கும் தனது மைத்துனர் இருக்கும் இடத்திற்கு செல்வதற்காக கடந்த 16 ஆம் திகதி காலை காட்டின் வழியே பயணம் செய்கையில் அவர் இவ்வாறான சம்பவமொன்றுக்கு முகம் கொடுத்துள்ளார்.

இந்த இளைஞர் காட்டில் காணாமல் போயுள்ளதாக அவரின் மனைவி கடந்த 17ஆம் திகதி தம்பலகாமம் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். இதனையடுத்து அங்கு கடமையாற்றும் பதில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியான பொலிஸ் பரிசோதகர் நாக்காலந்த முள்ளிப்பொத்தானை திஸ்ஸபுர இராணுவ முகாமுக்கு பொறுப்பான கேர்ணல் ராஜகுருவை தொடர்பு கொண்டு அவர்களின் உதவியை கோரினார். வனவிலங்கு பிரிவினரையும், கிராமத்து மக்களையும் இணைத்து தேடுதல் நடவடிக்கைகளும் கிராமத்தினருடன் இணைந்து கொண்டார்கள். அன்று பகல் காணாமல் போயிருந்த இளைஞர் குட்டையொன்றில் நீர் அருந்தும் போது கிராமத்தவர்களும் மற்றும் இராணுவத்தினரும் கண்டுள்ளார்கள்.பின்னர் அவரின் அருகில் சென்று அவரை மீட்டுள்ளார்கள். அவரின் உடம்பில் கீறல்கள் மாத்திரமே காணப்பட்டதாகவும் வேறு எதுவித காயங்களும் காணப்படவில்லை என்றும் அவர்கள் தெரிவித்தார்கள்.

இவ்வாறு மீட்கப்பட்ட இளைஞன் பின்னர் தான் முகம் கொடுத்த சம்பவம் பற்றி இவ்வாறு விவரித்தார்.

"நான் எனது மைத்துனருக்கு தொலைபேசி அழைப்பொன்றை எடுத்த பின்னர் அவர்கள் இருக்கும் இடத்திற்கு செல்ல ஆயத்தமானேன். நான் காட்டில் நடந்து கொண்டிருக்கும் பொழுது பெரிய கரடி ஒன்றைக் கண்டேன். அது என்னைப் பார்த்தவுடன் என்னை துரத்தத் தொடங்கியது. நான் அதனிடம் இருந்து தப்பிக் கொள்வதற்காக ஓடினேன். எவ்வளவு தூரம் ஓடினேன் என்று எனக்கு ஞாபகத்தில் இல்லை.

நான் நன்றாகப் பயந்திருந்தேன். அதன் பின்னர் ஒரு பெரிய மரத்தில் ஏறிக் கொண்டேன். இரவு முழுவதும் மரத்திலேயே இருந்தேன், தூங்கவில்லை. அடுத்த நாள் இறங்கி பாதையை தேடிக் கொண்டு வந்தேன். நான் தொடர்ந்தும் காட்டுக்குள்ளேயே சென்றுள்ளேன். தொலைபேசிக்கும் 'சிக்னல்' கிடைக்கவில்லை. எனக்கு 'சிக்னல்' கிடைத்த போது நான் தகவலை வீட்டாரிடம் கூறினேன். பின்னர் தொலைபேசியை நிறுத்தி வைத்துக் கொண்டேன்.

காட்டில் பழங்களை உண்டு, அன்று இரவும் ஒரு குட்டையில் நீரை அருந்து விட்டு மரத்தில் ஏறி இருந்து கொண்டேன். அன்றைய இரவையும் மிகுந்த பயத்துடன் மரத்திலேயே கழித்தேன். எந்தவித வெளிச்சமும் இருக்கவில்லை. எனது மரத்தைச் சுற்றி மிருகங்களின் சத்தமே கேட்டது. காலையில் நான் அருகிலிருந்த குட்டையில் நீர் அருந்தும் போது கிராமத்து மக்களையும் இராணுவத்தையும் கண்டேன். என்னை கிராமத்துக்கு அழைத்து வந்தார்கள். நான் அவர்களுக்கு நன்றி கூறுகிறேன்".

இவ்வாறு அந்த இளைஞர் விபரித்தார்.

இந்தச் சம்பவம் பற்றி தம்பலகாமம் பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் நாக்கந்தல கூறியதாவது:

"இந்த இளைஞன் காணாமல் போனமை தொடர்பாக முறைப்பாடு கிடைத்தவுடன், நான் எனது உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு இராணுவம் மற்றும் வனவிலங்கு பிரிவினர் சிலருடன் பாரிய தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டு இளைஞரைக் கண்டுபிடித்தோம்.

கரடி துரத்திய வேளையில் அந்த இளைஞர் கிராமத்துப் பக்கம் ஓடாமல் எதிர்த்திசையில் ஓடியே காட்டுக்குள் வெகுதூரம் சென்று காணாமல் போயுள்ளார். இவரை குளத்துப் பகுதியில் இருந்து 15 கிலோமீட்டர் தூரத்தில் அனுராதபுரம் மாவட்ட எல்லையில் கண்டுபிடித்தோம். தற்போது காடுகளில் தேன் உள்ளது. அதனை உட்கொள்வதற்காக கரடிகள் வருவதுண்டு.

இந்தக் காட்டுக்குள் மக்கள் நுழைவதற்கு தடை செய்யப்பட்டுள்ளது. ஆனாலும் மாடு வளர்ப்பவர்கள் அவற்றை மேய்ப்பதற்காக காட்டிற்குள் செல்கிறார்கள். வனவிலங்கு அதிகாரிகள் அதற்குத் தடை சொல்வதில்லை. நான் கிராமத்தவர்களுக்கு காட்டுக்குள் அநாவசியமாக நுழைய வேண்டாம் எனக் கூறுகின்றேன். அத்துடன் இந்த நடவடிக்கையில் இணைந்து கொண்ட பொலிஸ் அதிகாரிகள், இராணுவத்தினர், வனவிலங்கு அதிகாரிகள் மற்றும் கிராமத்தவர்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன்".

இவ்வாறு பொலிஸ் பரிசோதகர் நாக்கந்தல தெரிவித்தார்.

தமிழில்: **வீ.ஆர்.வயலட்**

'மனிதநேய ஒன்றிணைவு' திட்டத்தின் ஊடாக 50,000 குடும்பங்களுக்கு அவசரகால நிவாரணம்

'மனிதநேய ஒன்றிணைவு' 50,000 குடும்பங்களுக்கு ரூ. 125 மில்லியனுக்கும் அதிகளவான பெறுமதி கொண்ட அவசரகால நிவாரணங்களை விநியோகித்துள்ளது. நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் இந்த அவசரகால நிவாரண நடவடிக்கையுடன் இணைந்து கொள்ளுமாறு அனைத்து நிறுவனங்களையும் அழைக்கிறோம்.

தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் நாட்டில் மிகவும் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கும் குடும்பங்களுக்கும் ஆதரவு வழங்குவதற்காக ஆரம்பிக்கப்பட்ட 'மனிதநேய ஒன்றிணைவு' அவசரகால நிவாரண முயற்சியானது 2022 ஜூன் 7, நிலைவரப்படி நாடளாவிய ரீதியில் உள்ள அவசர நிவாரணம் தேவைப்படும் 50,000 குடும்பங்களுக்கு ரூ.125 மில்லியன் பெறுமதியான பொருட்களை விநியோகித்ததன் மூலம் இரண்டாவது மைல்கல்லை எட்டியுள்ளது.

மனிதநேய ஒன்றிணைவு

இந்த செயற்றிட்டமானது டயலொக் ஆசி ஆட்டா பிஎல்சி, MAS Holdings, Hemas Holdings PLC, CBL Group, Citi மற்றும் Sunshine Holdings PLC ஆகியவற்றின் கூட்டு முயற்சியாகும். இது அடிப்படைத் தேவைகளைக் கூட பூர்த்தி செய்ய முடியாமல் வறுமையில் வாடும் 200,000 குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ITN, சியத, சுவர்ணவாஹினி, டி.வி தெரண மற்றும் வசந்தம் ஆகியவை ஊடக பங்காளராக இந்த முயற்சிக்கு அதரவினை வருகின்றன.

தற்போது நாட்டின் 25 மாவட்டங்களிலும் அவசரகால நிவாரணங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. மேலும் பொருளாதார மீட்சித் திட்டத்தின் மூலம் நாட்டில் நிலையான நன்மைகள் நிலைநாட்டப்படும் வரை 'மனிதநேய ஒன்றிணைவு' திட்டமானது அதன் நிவாரண நடவடிக்கைகளைத் தொடரும். நாடளாவிய ரீதியில் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள 200,000 குடும்பங்களுக்கு உடனடி நிவாரணம் வழங்குவதற்கான எமது கூட்டு முயற்சியில் எங்களுடன் இணைந்து கொள்ளுமாறு ஏனைய அனைத்து நிறுவனங்களுக்கும் அழைப்பு விடுக்கின்றோம்.

'மனிதநேய ஒன்றிணைவு' பற்றிய மேலதிக விபரங்களுக்கு https://www.dialog.lk/corporate இற்கு செல்லுங்கள்.

மனித வாழ்வுக்கான கச்சிதமான ஏற்பாடுகள்

அல்லாஹ்தஆலா பிரபஞ்சம் உள்ளிட்ட அத்தனை வஸ்துகளையும் படைத்து பரிபாலித்துக் கொண்டிருப்பவனாவான். 'அவன் எதைப் படைக்கக் கருதினாலும் அதனை 'ஆகுக' எனக்கூறிய மாத்திரத்தில் உடனே அது ஆகிவிடுகிறது' (02: 117) என்று அல் குர்ஆன் கூறிக்கொண்டிருக்கின்றது. அவ்வாறான மாபெரும் சக்தியையும் ஆற்றலையும் தன்னகத்தே கொண்டுள்ள அல்லாஹ் படைப்பதோடு நின்று விடாது, தாம் படைக்கின்ற அனைத்து படைப்புக்களையும் நிர்வகிக்கக்கூடியவனாகவும் இருந்து கொண்டிருக்கின்றான். அவனது பராமிப்பும், கண்காணிப்பும் நிர்வாகமும் இல்லாவிட்டால் இப்படைப்புகள் எப்போதோ அழிந்து நாசமாகி இருக்கும்.

உதாரணத்திற்கு ஞாயிற்று தொகுதியை எடுத்து நோக்கினால் சூரியனைச் சுற்றி ஒன்பது கோள்கள் வலம் வந்த வண்ணமுள்ளன. அவற்றுக்கு நிர்ணியிக்கப்பட்ட ஒழுங்கிலும் பாதையிலும் அவை வலம் வருகின்றன. தமக்கு நிர்ணிக்கப்பட்ட ஒழுங்குக்கு அப்பால் அவை அணுவளவு கூட செயற்பட எண்ணுவதுமில்லை, அதற்காக முயற்சிப்பதுமில்லை. ஏனெனில் அல்லாஹ் விதித்துள்ள நிர்ணயத்திற்கு அப்பால் செயற்பட எண்ணுவது கூட அழிவையும் நாசத்தையுமே தேடித்தரக்கூடியதாகவே இருக்கின்றது. அதனால் அவ்வாறான நிலை ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கான ஒழுங்கை அல்லாஹ் ஈர்ப்புச்சக்தியைக் கொண்டு உறுதிப்படுத்தி வைத்திருக்கின்றான். அதனால் எந்தவொரு கோளும் ஒன்றை ஒன்று முந்திச் செல்லவோ, நெருங்கிச் செல்லவோ, சொற்ப நேரம் ஓரிடத்தில் தரித்து ஓய்வெடுத்து பயணிக்கவோ அல்லது பிரிந்து விலகிச் செல்லவோ முயற்சிப்பதில்லை.

தமக்கு நிர்ணயிக்கப்பட்ட ஒழுங்குக்கு ஏற்ப செயற்படுவதே அவற்றின் பணியாகும். அதனால் பிரபஞ்சம், அதிலுள்ள கோள்கள் உள்ளிட்ட அனைத்து படைப்புகளும் அல்லாஹ்வின் கட்டளைக்கு ஏற்ப அச்சொட்டாக செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. உதாரணத்திற்கு ஞாயிற்றுத் தொகுதியிலுள்ள பூமியோ அல்லது வேறு ஏதாவதொரு கோளோ செயற்படுமாயின் அவை ஒன்றுடன் ஒன்று மோதுண்டு பேரழிவுகள் ஏற்படும். குறிப்பாக பூமியிலுள்ள உயிரினங்கள் உள்ளிட்ட படைப்புகளும் அழிவுகளுக்கும் சேதங்களுக்கும் உள்ளாவதைத் தவிர்க்கவே முடியாது.

மனிதன் பூமியில் படைக்கப்பட்டுள்ள ஒரு படைப்பான போதிலும் அவன் பூமியோடும், வளிமண்டலத்தோடும் பிரபஞ்சத்தோடும் பிணைக்கப்பட்டவனாகவே இருக்கின்றான். அதனால் அல்லாஹ்வின் நிர்ணயத்திற்கு ஏற்ப சூரியனை வலம் வந்து கொண்டிருக்கும் பூமி சூரியனை விட்டு விலகிச் செல்வது அல்லது சூரியனை நெருங்கிச் செல்வது இரண்டுமே உயிரின அழிவுக்கு வழிவகுக்கக்கூடியது என்று உயிரின விஞ்ஞானிகள் தெரிவித்திருக்கின்றனர். அதாவது சூரியனை பூமி நெருங்கிச் செல்லும் போது உஷ்ணம் அதிகரித்து உயிரினங்கள் உயிர்வாழ முடியாத நிலை ஏற்படுவது போன்று சூரினை விட்டு பூமி விலகிச் செல்லும் போது குளிர் அதிகரித்து உயிர் வாழ முடியாத நிலைமை ஏற்படும்.

அதனால் பூமியை அல்லாஹ் மனிதன் உள்ளிட்ட உயிரின வாழ்வுக்கு பொறுத்தமான வகையில் கச்சிதமாக வடிவமைத்திருக்கின்றான். இவ்வடிவமைப்பில் அணுவளவு பலவீனம் ஏற்பட்டாலும் உயிரினங்கள் பலவிதமான பாதிப்புகளுக்கும் தாக்கங்களுக்கும் மாத்திரமல்லாமல் அழிவுகளுக்கும் முகம் கொடுக்கும். குறிப்பாக சூரியனில் இருந்து பல வகையான நச்சுக்கதிர்வீச்சுகள் வெளிப்பட்ட வண்ணமுள்ளன. அவற்றில் அல்ட்ரா வயலட் ஊதாக் கதிரும் ஒன்றாகும். இந்நச்சுக் கதிர்வீச்சுகள் பூமியை நேரடியாக வந்தடையுமாயின் மனிதன் உள்ளிட்ட உயிரினங்கள் பல்வேறு விதமான தாக்கங்களுக்கும் பாதிப்புகளுக்கும் உள்ளாகும். அதனைத் தவிர்ப்பதற்காக ஒசோன் படலம் உள்ளிட்ட கச்சிதமான வடிகட்டல் ஏற்பாடுகளை அல்லாஹ் செய்து வைத்திருக்கின்றான். இவற்றில் பலவீனங்கள் ஏற்பட்டால் கூட மனிதன் உள்ளிட்ட உயிரினங்களுக்கு பாதிப்புகள் ஏற்படவே செய்யும். குறிப்பாக சூரியனின் ஊதாக்கதிர்கள் பூமியை வந்தடையுமாயின் தோல் புற்று நோய் உள்ளிட்ட பலவித நோய்களுக்கு உள்ளாகவும் நேரிடும்.

மேலும் பூமியிலிருந்து சுமார் 5000 ஒளி ஆண்டுகளுக்கு அப்பாலுள்ள கோள் ஒன்றிலிருந்து ஒலி வெளிப்பட்ட வண்ணமுள்ளன. அதனை நாஸா விஞ்ஞானிகளும் பதிவு செய்துள்ளனர். அந்த கோள் பூமியை நெருங்கி வருமாயின் அந்த ஒலியின் விளைவாக மனிதனின் செவிப்பறைகள் கடும் பாதிப்புக்கு உள்ளாகும் என்றும் விஞ்ஞாகளிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதேநேரம் பூமியின் மேற்பகுதியில் உள்ள வளிமண்டலத்தை எடுத்து நோக்கினால் அதில் பலவித

மர்லின் மரிக்கார்...

வாயுக்கள் காணப்படுவதை அவதானிக்கலாம். அவற்றில் ஒட்சிசனும் ஒன்றாகும். இந்த ஒட்சிசனுடன் மனித உயிர்வாழ்வு பிணைக்கப்பட்டிருக்கின்றது. வளி மண்டலத்தில் பல வாயுகள் கலந்துள்ள போதிலும் அவற்றில் ஒட்சிசனை மாத்திரம் சுவாசத்தின் ஊடாக உள்வாங்கியபடி உயிர்வாழும் படைப்பாக மனிதன் விளங்குகிறான்.

இவை இவ்வாறிருக்க, மனிதனின் உயிர்வாழ்வுக்கு ஆரோக்கியம் மிகவும் இன்றியமையாதது. அந்த ஆரோக்கியத்திற்கு சக்தி மிகவும் அவசியம். அந்த சக்தியை பூமியை அடிப்படையாகக் கொண்டு விளைவிக்கப்படும் உணவுப் பயிர்கள் ஊடாக பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாட்டை அல்லாஹ் செய்து வைத்திருக்கின்றான். அத்தோடு பூமியிலுள்ள அத்தனை படைப்புக்களையும் மனிதனுக்கு வசப்படுத்திக் கொடுத்துள்ள அல்லாஹ், அவை மனிதனுக்கு உழைப்பதற்காக ஏற்பாடு செய்து வைத்துள்ளான். அவற்றில் மனிதனை விடவும் பலம் கொண்ட விசாலமான படைப்புகள் காணப்பட்ட போதிலும் அவையும் அல்லாஹ்வின் கட்டளைக்கு ஏற்ப மனிதனுக்கு கட்டுப்பட்டு அவனுக்காக உழைக்கக்கூடியனவாக உள்ளன.

இவ்வாறு அனைத்து படைப்புகளையும் கச்சிதமாகப் படைத்து நிர்வகித்து வருகின்ற அல்லாஹ், அவற்றின் உரிமையாளனாகவும் அவற்றின் மீது அதிகாரம் செலுத்துபவனாகவும் இருக்கின்றான். எந்தவொன்றையும் பண்படுத்துவதற்கும் சீர்திருத்துவதற்கும் அதிகாரம் செலுத்தப்பட வேண்டும். அதனை அவன் செய்கிறான். அவனது கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பின் கீழ் பிரபஞ்சத்திலுள்ள அனைத்து படைப்புகளும் உள்ளன. அவனது கண்காணிப்பின்றி எந்தவொரு படைப்பும் கிடையாது. படைப்பாளனுக்கும் படைப்புகளுக்கும் இடையிலான தொடர்பு ஒவ்வொரு வினாடியும் ஒவ்வொரு நிலையிலும் நீடித்த வண்ணமுள்ளன.

அதனால் தான் அல் குர்ஆன்,'வானங்களிலும் பூமியிலும் உள்ளவை அனைத்துமே (அவை) விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அவனுக்கு கீழ்படிந்தே நடக்கின்றன. அன்றி (அவையனைத்தும்) அவன் பக்கமே திரும்பக் கொண்டு வரப்படும்' (02 : 83) என்றும் 'வானங்களிலும் பூமியில் இருப்பவை அனைத்தும் (அவை) விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் அல்லாஹ்வுக்கு சிரம்பணிந்து வழிபட்டே தீரும். காலையிலும் மாலையிலும் அவற்றின் நிழல்களும் (அவனுடைய கட்டளைக்கு வழிபட்டே முன்பின் செல்கின்றன)' (13 :15) என்று குறிப்பிட்டிருக்கின்றன. இந்த வசனங்களின் படி அனைத்து படைப்புகளும் அல்லாஹ்வுக்கு கீழ்படிந்து நடப்பதோடு அவனுக்கு சிரம்பணிந்து வழிபடக்கூடியனவாகவும் இருப்பது தெளிவாகிறது. அவனது பராமரிப்பிலும் பாதுகாப்பிலும் தொடராக இருந்து வருவதால் தான் படைப்புகள் நிம்மதியையும், மன அமைதியும் அடைந்து கொள்கின்றன. இப்பாதுகாப்பும் பராமரிப்புமின்றி ஒரு வினாடிகூட மனிதனால் அமைதி நிம்மதியை பெறவோ, உயிர்வாழவோ முடியாது.

இவ்வாறு மனித உயிர்வாழ்வுக்கு தேவையான அத்தனை ஏற்பாடுகளையும் அல்லாஹ் மிக நுணுக்கமாக திட்டமிட்டு மேற்கொண்டுள்ளான். அந்த ஏற்பாடுகள் அனைத்தும் ஆச்சரியமானதும் அற்புதங்கள் நிறைந்தவையுமாகும். இவை மனிதன் தனக்காக செய்து கொண்டுள்ள ஏற்பாடுகள் அல்ல. இருந்தும் இந்த ஏற்பாடுகளின் பெறுமதியையும் மகத்துவத்துவத்தையும் மனிதர்களில் பெரும்பாலானவர்கள் அறிந்து கொள்ளாதவர்களாகவே இருக்கின்றனர். அது கவலைக்குரிய விடயமாகும். ஆனால் இவற்றை அறிந்தவர்கள் அவனை புகழ்ந்து துதித்து நன்றி செலுத்தி வணங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே அல்லாஹ் ஏற்பாடு செய்து தந்துள்ள வசதி வாய்ப்புகள், பாதுகாப்பு, வாழ்வாதாரம் உள்ளிட்ட அனைத்துக்காகவும் அவனுக்காக மனிதன் எவ்வளவு நன்றி செலுத்தினாலும் அவற்றுக்கு ஈடாகாது. என்றாலும் அவனது வழிகாட்டல்களுக்கும் நபி(ஸல்) அவர்களின் போதனைகளுக்கும் அமைய அவனுக்கு நன்றி செலுத்தி அவனது அன்பையும் அருளையும் பெற்றுக்கொள்வோம்.

ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

அல்லாஹ்வை சந்திக்க விரும்புவோம்

அபூமூஸா (ரலி) அறிவிக்கிறார்கள், 'ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், 'எவர் அல்லாஹ்வை சந்திக்க விரும்புகிறாரோ அவரை அல்லாஹ்வும் சந்திக்க விரும்புகிறான். எவர் அல்லாஹ்வை சந்திக்க விரும்பவில்லையோ அவரை சந்திக்க அல்லாஹ்வும் விரும்புவதில்லை' எனக் குறிப்பிட்டார்கள்.

(ஆதாரம் : புஹாரி)

தன்னைப் படைத்த இறைவனை சந்திக்க வேண்டும் என்பது ஈமான் கொண்ட முஸ்லிமின் அடிமனது ஆசையும் உள்ளக்கிடக்கையும் உண்மையான ஏக்கமுமாக இருக்கும். இந்த ஆசையும் ஏக்கமும் எதிர்பார்ப்பும் ஒருவது இதயத்தை உயிர்த்துடிப்புடன் இயங்க வைக்கும். அவரை எல்லா வகையான இருள்களில் இருந்தும் விலகி இருக்க வழிவகை செய்யும். அல்லாஹ்வை சந்திக்க வேண்டுமென்ற ஆசை ஆளையே மாற்றிவிடும். உலக அழுக்குகளை விட்டும் அவனது உள்ளம் தூய்மை அடைந்துவிடும். எந்த உள்ளத்தில் அல்லாஹ்வை சந்திக்க வேண்டும் என்ற ஆசை கமழ்ந்து கொண்டிருக்கிறதோ அதே உள்ளத்தில் வெறுக்கத்தக்க தீமையான விடயங்களை எதிர்பார்க்க முடியாது.

அல்லாஹ்வை சந்திக்க வேண்டும் என்ற ஆர்வமோ எதிர்பார்ப்போ ஏக்கமோ ஆசையோ ஒருவருக்கு இல்லையெனில் அல்லாஹ்வும் அவரில் தேவையற்றவனாவான். சத்தியத்தை மதிக்கத் தெரியாதவனை மதிக்க வேண்டுமென்ற தேவை, அவசியம் அல்லாஹ்வுக்கு இல்லை. அவன் தேவைகள் அற்ற பூரணத்துவமானவனாக இருக்கிறான். இதனை ஒவ்வொருவரும் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். அதனால் அல்லாஹ்வை சந்திப்பதிலும் அவனது அருளையும் அன்பையும் அடைந்து கொள்வதிலும் ஒவ்வொருவரும் உச்சபட்ச கவனம் செலுத்த வேண்டும். அது ஈருலக வாழ்வின் விமோசனத்திற்கான அடித்தளமாக இருக்கும்.

ஐத்து மைஸறா ...

அல் குர்ஆனின் அருள் தரும் வசனங்கள்

'(அதற்கு நன்றி செலுத்துவதற்காக) உங்களது 'ரப்'பை புகழ்ந்து துதி செய்து அவனுடைய (அருளையும்) மன்னிப்பையும் கோருவீராக... நிச்சயமாக அவன் (துஆ' (பிரார்த்தனை) க்களை அங்கீகரித்து) மன்னிப்புக் கோருதலையும் அங்கீகரிப்பவனாக இருக்கிறான்'. (110 : 3)

'(அவைகளுக்கு நன்றி செலுத்துவதற்காக) நீங்கள் உங்களது 'ரப்'பை தொழுது குர்பானி (செய்து) கொடுத்து வாருங்கள்'. (108 : 2)

(நன்றி செலுத்துவதற்காக) இவ்வீட்டின் 'ரப்'பை அவர்கள் வணங்கவும். (106 : 3)

ஹஜ் ஓர் அறிமுகம்

இஸ்லாத்தின் பிரதான கடமைகளில் ஒன்றே ஹஜ் ஆகும். பொருளாதார வசதிபடைத்த ஒவ்வொருவரும் வாழ்நாளில் ஒரு தடவை நிறைவேற்ற வேண்டிய கடமை இது. அதேநேரம் வருடத்திற்கு ஒரு தடவை குறிக்கப்பட்ட காலத்தில் நிறைவேற்றப்படும் கடமையாகவும் விளங்கிக் கொண்டிருக்கிறது ஹஜ். அதுதான் துல் ஹஜ் மாதமாகும்.

ஹிஜ்ரி ஒன்பதாம் ஆண்டில் கடமையாக்கப்பட்ட இக்கடமையானது, கடமைகளின் ஒழுங்கில் இறுதியாக விதியாக்கப்பட்டதாகும். சத்தியம் செய்யப்பட்டும் பாதுகாக்கப்பட்டும் உள்ள பூமிக்கு உடலாலும் உள்ளத்தாலும் மேற்கொள்ளப்படுகின்ற ஒரு பயணமே ஹஜ். இது ஒற்றுமையினதும் சமத்துவத்தினதும் குறிகாட்டியாகவும் மாத்திரமல்லாமல் உலகலாவிய முஸ்லிம்களின் ஐக்கிய மாநாடாகவும் திகழுகின்றது.

இங்கு அமைந்துள்ள கஃபாவை முன் நோக்கி நாளாந்தம் தொழுவது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமையாக்கப்பட்டுள்ளது. இது உலகில் அமைக்கப்பட்ட முதல் பள்ளிவாசலாகும்.

ஹஜ் கடமையின் செயல்பாடுகள் 'மீகாத்' எனப்படும் எல்லையிலிருந்து ஆரம்பமாகும். அந்த எல்லையிலே இஹ்ராம் ஆடையை அணிந்து கொள்ள வேண்டும் அல்லது ஹஜ் செய்வதற்கான (நிய்யத்) எண்ணம் கொண்டு அதனை மொழிந்து கொள்ள வேண்டும். இஹ்ராம் என்பது ஆடம்பரமற்ற சாதாரண வெண்ணிற ஆடையாகும். இது மரணமடைந்த பின்னர் அணிவிக்கப்படும் 'கபன்' ஆடைக்கு சமனானது. இவ்வாடையை அணிந்ததன் பின்னர் சாதாரண நிலையில் தனக்கு அனுமதிக்கப்பட்ட விடயங்கள் தனக்கு தடுக்கப்பட்டுள்ளது என்று கருதுவார்கள்.

இதனை தொடர்ந்து ஹஜ் காலம் முழுமையாக 'இறைவா உனக்கு பதிலளித்து விட்டேன். உனக்கு நிகராக எதுவுமில்லை. புகழும், அருள்களும், அதிகாரமும் உனக்கேயுரியன. உனக்கு நிகராக எதுவுமில்லை' என்ற வார்த்தையை மொழிந்தவர்களாக இருப்பார்கள். ஹஜ்ஜின் அடுத்த செயல்பாடு 'தவாப்' ஆகும். இது கஃபா என்ற இறையில்லத்தை சுற்றி வருவதை குறிக்கும். தொடராக 'ஸபா', 'மர்வா' என்ற இரு மலைத்தொடரில் வேகமாக நடந்து கடக்க வேண்டும். அத்தோடு துல்ஹஜ் பிறை ஒன்பதில் பகல் நேரத்தில் 'அரபா' மைதானத்தில் தரித்திருக்க வேண்டும். அத்தோடு 'ஜம்ரா' எனப்படும் இடங்களில் ஷைத்தானுக்கு கல்லெறிதல், 'மினா' என்ற மைதானத்தில் இரவை களித்தல், 'ஹத்யு' எனப்படும் பலியிடல் போன்றவற்றுடன்

அஷ்ஷெய்க் யூ.கே. றமீஸ் எம்.ஏ (சமூகவியல்)

ஸுன்னத்தான பல விடயங்களும் காணப்படுகின்றன.

இஹ்ராம் முதல் கிரியையாக அமைந்திருப்பதோடல்லாமல் மனோ இச்சைகளுக்கு அடிமையாகும் நிலையிலிருந்து விடுபட்டு உள்ளத்தையும் சிந்தனையையும் ஒழுங்குபடுத்துவதற்கான சிறந்த பயிற்சியாகவும் விளங்குகிறது. 'தல்பியா' என்பது இறைவனுக்கு கட்டுப்படுவேன் என்ற பிரகடனமாகவும் 'தவாப்' என்பது மானுட உள்ளத்தையும் இறைவனின் புனிதத்தையும் சங்கமிக்கச் செய்கின்ற உயர்ந்த ஆன்மீக செயல்பாடாகவும் உள்ளது. 'ஸஃயு' என்ற தொங்கோட்டம் இறைதிருப்தியையும் மன்னிப்பையும் அடைந்து கொள்வதற்கான சிறப்பான ஏற்பாடாகும்.

'அரபா', 'மினா' போன்ற இடங்களில் தரிப்பதென்பது உள்ளத்திலே இறையச்சத்தை நிரப்பிக் கொண்டு இரு கரங்களையும் அவனை நோக்கி உயர்த்தி மிக்க எதிர்பார்ப்புடன் அவனிடம் பிராத்தனை புரிவதாகும். 'ஜம்ரா' க்களில் கல்லெறிதல் என்பது உள்ளத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் தீய ஷைத்தானிய சக்திகளை இழிவுபடுத்தவதாகும். 'ஹத்யு' என்ற பழியிடல் என்பது தியாகம், அர்ப்பணம் போன்றவற்றின் குறியீடாக அமைந்திருக்கின்றது.

மேலும் அனைத்து வணக்க வழிபாடுகளினதும் பிரதான பொதுநோக்கம் அல்லாஹ்வுக்கு நன்றியுள்ளவனாக இருப்பதும் அவன் சொன்னபடி அவனுக்கு கட்டுப்படுவதுமாகும். ஹஜ்ஜின் பிரதான நோக்கமும் அதுதான். எனினும் இதுவல்லாத இன்னும் பல நோக்கங்களும் ஹஜ் ஜுக்கு உள்ளன.

அது தனியாளின் உள்ளத்திலும், சிந்தனையிலும், வாழ்விலும், சமூகத்திலும் பல தாக்கங்களையும் மாற்றங்களையும் ஏற்படுத்தக்கூடியதாகும்.

இதனை அல்லாஹ் 'ஹஜ் செய்யுமாறு மக்களுக்கு பொது அறிவிப்பு செய்வீராக. அவர்கள் வெகு தூரமான இடங்களில் இருந்தெல்லாம் நடந்தும் ஒட்டகங்களில் பயணம் செய்தும் உம்மிடம் வருவார்கள். அவர்களுக்காக அங்கு ஏற்படுத்தப்பட்டுள்ள நன்மைகளை அவர்கள் காணட்டும். மேலும் அல்லாஹ் அவர்களுக்கு வழங்கிய கால்நடைகளை சில குறிப்பிட்ட நாட்களில் அவனது பெயர்கூறி அறுத்திட வேண்டும். அவற்றிலிருந்து அவர்களும் சாப்பிட்டு தேவையான வறியவர்களுக்கும் கொடுத்து விடுங்கள்.' (ஹஜ் 27, 28) என்று குறிப்பிடுகிறான்.

ஹஜ் கிரியை மூலம் பலவிதமான பயன்களை அடைந்து கொள்ளலாம். அவற்றில் பிரதானமானது ஆன்மா போஷிக்கப்படுவதாகும். அதாவது ஆன்மாவை பலப்படுத்துவதில் ஹஜ்ஜுக்கு பெரும் பங்கு உண்டு. அதனால் ஒரு முஸ்லிம் ஹஜ்ஜை சிறந்த கட்டுச்சாதனமாக பயன்படுத்திக் கொள்வான். இறையச்சத்தால் தன்னை நிரப்பிக்கொள்ளவும், அல்லாஹ்வுக்கு முழுமையாக கட்டுப்படுவதற்கு உறுதிபூணவும், பாவச்செயல்களுக்காக கவலைப்பட்டு அதிலிருந்து நீங்கி தன்னை தூய்மைப்படுத்திக் கொள்ளவும் ஹஜ் துணை நிற்கக்கூடியதாகும்.

அதேநேரம் ஹஜ் யாத்திரையானது, மனிதனின் அறிவுக் கண்களை திறந்து விடக்கூடியதாகவும் உள்ளது. தன்னை சூழவுள்ள பாரிய பிரபஞ்சத்தை பார்க்கவும் வித்தியாசமான கலாசாரங்கள், காலநிலை மாற்றங்கள் போன்றவற்றை அறிந்து புது அனுபவங்களை பெற்றுக் கொள்ளவும் அறிவை விரிவாக்கி கொள்ளவும் ஹஜ் துணைநிற்கிறது.

மேலும் ஹஜ்ஜில் வியாபார நலன்களும் காணப்படுகின்றன. நபி(ஸல்) அவர்களது காலத்துக்கு முன்பிருந்தே இருந்து வருகின்ற ஒரு நடைமுறை இது. உலக விடயங்களான இலாபம் பெறுதல், வாழ்க்கை வசதிகளை அனுபவிப்பதை சில ஸஹாபா தோழர்கள் சங்கடமான ஒன்றாகக் கருதினார்கள். இது வணக்க வழிபாடுகளில் ஒரு குறைவை ஏற்படுத்தும்.

நன்மைகள் குறைவடைந்த விடலாம் என்று அவர்கள் நினைத்தார்கள். ஆனால் அல்லாஹ் இதனை அங்கீகரித்தான். நிய்யத் என்ற எண்ணம் சீராக இருந்தால், பிரதான இலக்கு ஹஜ்ஜை நிறைவேற்றுதல் என்றும் இருக்கும் போது இது சரியானதே என்பது அல்குர்ஆனின் கருத்தாகும். 'உக்காழ், மஜன்னா, துல் மஜாஸ் போன்றவை ஜாஹிலிய்யா கால சந்தைகளாக காணப்படடன. அங்கு வியாபாரம் செய்தவர்கள் ஹஜ் காலத்தில் வியாபாரத்தில் ஈடுபட தயக்கம் காட்டினார்கள். இதுபற்றி நபி (ஸல்) அவர்களிடம் வினவினார்கள். அச்சமயம், அல் குர்ஆனின் 'ஹஜ் பிரயாணத்தின் போது நீங்கள் வியாபாரம் செய்து உங்கள் இரட்சகனிடமிருந்து பேரருளை தேடுவது உங்கள் மீது குற்றமாகாது' (பகரா 198) என்ற வசனம் அருளப்பட்டது.

(ஆதாரம்: புகாரி)

அதேவேளை, இஸ்லாமானது அடிப்படையான சில விடயங்களை போதனைகளாக மாத்திரம் முன் வைக்காது வணக்க வழிபாடுகளுடன் இணைத்தே வைத்துள்ளது. இதன் மூலம் ஒரு முஸ்லிமின் அறிவிலும் சிந்தனையிலும் உணர்விலும் நடத்தையிலும் அதனை கொண்டு வர அது எதிர்பார்க்கிறது. உதாரணமாக கூட்டுத் தொழுகையில் நாம் காணுகின்ற சகோதரத்துவம், சமத்துவம், சுதந்திரம் போன்ற பண்புகளை ஹஜ்ஜில் இன்னும் ஆழமாக அவதானிக்கலாம்.

இங்கு பிரதேச, பிராந்திய, மொழி, இன, தர, பதவி என்ற வித்தியாசங்களை மறந்து ஒரே வித ஆடை அணிந்து, ஒரே விதமான வணக்கங்களில் ஈடுபட்டு ஒரே கோஷத்தை மொழிந்தவர்களாக ஒரே நோக்கத்தோடு ஒன்றுகூடி இருப்பதை காணலாம். அனைவரும் ஏகன் அல்லாஹ்வை நம்பி ஒரே கஃபாவை சுற்றி வந்து ஒரே வேதத்தை ஓதி ஒரே நபியை பின்பற்றி ஒரே செயல்களை செய்வதென்பது எத்துணை ஆழமான ஒற்றுமையை வெளிப்படுத்தி நிற்கிறது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

ஹஜ் என்பது சமாதான காலத்தில் சமாதான பூமியை நோக்கிய சமாதான பயணமாகும். அது பாதுகாக்கப்பட்ட சமாதான பூமியாகும். 'அங்கு நுழைபவர் அச்சம் தீர்ந்து பாதுகாக்கப்படுவார்'

(ஆல இம்ரான் 97).

எனது தந்தையைக் கொலை செய்த வரை அங்கு கண்டாலும் அவருக்கு நான் எதனையும் செய்ய மாட்டேன் என்று உமர் (ரழி) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அந்த நிலத்தில் வாழ்கின்ற பறவைகள் மிருகங்கள் வேட்டையாடக் கூடாது. தாவரங்கள் வெட்டப்பட கூடாது என்ற கட்டளை மனிதன் மாத்திரமன்று ஏனைய படைப்புகள் கூட நிம்மதியாக இருக்க அனுமதிக்கப்பட வேண்டும் என்பதை காட்டுகிறது.

ஆகவே ஹஜ் கடமையை அதற்கே உரிய ஒழுங்கில் நிறைவேற்றிடுவோம்.

நிமல் - ஸ்ரீல சு.க பிணக்கு நீதிமன்றத்தில் நேற்று இணக்கப்பாட்டுக்கு வந்தது

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் தற்போது வகிக்கும் பதவிகளில் எந்தவொரு பதவியிலிருந்தும் அவரை விலக்காமை உள்ளிட்ட ஆறு இணக்க நிபந்தனைக்கு இணங்க, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் கட்சியின் மத்திய செயற்குழுவுக்கு எதிராக தாக்கல்செய்யப்பட்டுள்ள வழக்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் நேற்று இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளது.

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இத்தகைய இணக்க நிபந்தனையை ஏற்படுத்திக்கொண்டுள்ளதாகவும் அந்த இணக்க நிபந்தனைக்கிணங்க வழக்கை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல முடியாது என்றும் இரு தரப்பினரதும் சட்டத்தரணிகள் நீதிமன்றத்திற்கு தெளிவுபடுத்தியுள்ளனர். அதனையடுத்து கொழும்பு மாவட்ட நீதிபதி பூர்ணிமா பரணகம ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு விடுத்திருந்த அழைப்பாணையை இரத்துச்செய்து வழக்கை இணக்கப்பாட்டுக்கு கொண்டுவந்துள்ளார்.

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா கட்சியில் வகிக்கும் பதவி சம்பந்தமாக தீர்மானத்தை மேற்கொள்வதை விலக்கிக்கொள்ளுமாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கட்சியின் செயலாளர் தயாசிறி ஜயசேகர, லசந்த அழகியவன்ன மற்றும் துமிந்த திஸாநாயக்க ஆகியோருக்கெதிராக விடுக்கப்பட்டிருந்த அழைப்பாணை இவ்வாறு ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

நிமல் சிறிபால டி சில்வா தற்போதைய அரசாங்கத்தில் அமைச்சு பதவியை பொறுப்பேற்றுகொண்டமை தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி விடுத்த ஊடக அறிக்கையை அடிப்படையாக வைத்து இந்த வழக்கு தாக்கல்செய்யப்பட்டதுடன் ஊடக அறிக்கைக்கிணங்க தாம் தமது பதவிகளிலிருந்து விலகுதல் மற்றும் சட்டத்திற்கு முரணாக தீர்மானங்களை மேற்கொள்வது தொடர்பில் மேற்படி வழக்கு தொடரப்பட்டிருந்தது.

மைத்திரிக்கு எதிராக அத்துரலியே...

மைத்திரிபால சிறிசேன, றோயல் பார்க் கொலை சம்பவத்தின் குற்றவாளிக்கு மன்னிப்பு வழங்குமாறு, அத்துரலியே ரதன தேரர் கோரிக்கை விடுத்ததாக கூறியிருந்தார்.

குற்றவியல் விசாரணை திணைக்களத்தில் முறைப்பாடு செய்த பின்னர், வெளியில் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டுள்ள அத்துரலியே ரதன தேரர்,

ஜூட் மாந்த ஜயமஹா என்ற நபரை விடுதலை செய்யுமாறு சிறைச்சாலையை அடிப்படையாக கொண்டு இயங்கும் விசேட நிபுணர்கள் குழுவே உத்தரவிட்டது.

அந்த குழுவில் முன்னாள் நீதிபதிகள், சட்டத்தரணிகள், மனநல மருத்துவ நிபுணர்கள் உட்பட முக்கியமானவர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

இவர்களே விடுதலை செய்யக் கூடிய நபர்கள் குறித்த விசாரணைகளை நடத்துவார்கள். அவர்களே விடுதலை செய்யுமாறு பரிந்துரைத்தனர்.

ஜெயமஹா என்ற நபருக்கு வழங்கப்பட்ட மரண தண்டனை ஆயுள் தண்டனையாக குறைத்து, அதன் பின்னர் சில வருடங்கள் சென்ற பின்னர், அவரை மரண தண்டனையில் இருந்து விடுவிக்குமாறு விசேட நிபுணர்கள் குழு பரிந்துரைத்திருந்தது எனக் கூறியுள்ளார்.

வாகன இலக்கத்தட்டின்...

மற்றும் வெள்ளிக்கிழமைகளிலும் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

வாகன இலக்க தகட்டில் 6,7,8, 9 ஆகிய இறுதி இலக்கங்களை கொண்ட வாகனங்களுக்கான எரிபொருளை புதன், சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் வழங்குமாறும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இந்த நடைமுறை ஆரம்பமாகும் தினம் தொடர்பில் இதுவரை எந்தவித அறிவிப்பும் வெளியாகவில்லை.

அதிக விலைக்கு அரிசி...

தெரிவித்தார்.

அதிகரித்த விலையில் அரிசியை விற்பனை செய்த 186 பேரையும் விலைகளைக் காட்சிப்படுத்தாமை உள்ளிட்ட குற்றங்களுக்காக 479 பேரையும் கைது செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள 22 வழக்குகளில் குற்றவாளிகளிடம் இருந்து 32 இலட்சம் ரூபா தண்டப்பணம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பெண்மை, தாய்மையை...

முன்பு தாய்மை என்பது மதிக்கப்பட வேண்டும் என்று பிரதமர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் (22) பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வீட்டிற்கு முன்னால் ஹிருணிக்கா ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த போது அவரது உடல் அங்கங்கள் தெரியுமாறு எடுக்கப்பட்ட அநாகரீகமான, மோசமான புகைப்படங்கள் சமூக ஊடகங்களில் பகிரப்பட்டமை தொடர்பில் கருத்து தெரிவித்த போதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

''அரசியல் காரணங்களுக்காகவே ஹிருணிக்கா எனது வீட்டிற்கு அருகில் வந்து ஆர்ப்பாட்டம் செய்தார். அதை நாகரீகமாக அணுகவேண்டும். பெண்மையை, தாய்மையை கொச்சைப்படுத்தும் வகையில் எவரும் அநாகரீகமாக நடந்துகொள்ளக் கூடாது.'' என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இல்லத்துக்கு முன்பாக நேற்று முன்தினம் (22) இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது எடுக்கப்பட்ட ஹிருணிகா பிரேமச்சந்திரவின் புகைப்படங்கள் பல அநாகரிகமான முறையில் பகிரப்படுவது தொடர்பிலேயே பிரதமர் ரணில் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

இலங்கை அகதிகளுக்காக...

தமிழகம் முழுவதும் 106 இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் வசிக்கும் மக்களுக்கு 317 கோடிரூபாவில் புதியதாக வீடுகள் கட்டித்தரும் திட்டத்தை அறிவித்தார்.

முதற்கட்டமாக தூத்துக்குடி மாவட்டம் தாப்பாத்தி முகாமிலுள்ள மக்களுக்கு வீடுகள் கட்டுவதற்கான பணிகள் தொடங்கப்படவுள்ளன. விளாத்திகுளம் அருகே உள்ள தாப்பாத்தி இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் வசிக்கும் மக்களுக்கு தமிழக அரசு சார்பில் விரைவில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

பாம்பு கடிக்கு மருந்தின்றி...

சில மருந்துகளுக்கு தற்போது பயன்படுத்தப்படும் மாற்று மருந்துகளும் அடுத்த 3 வாரங்களுக்குள் மருத்துவமனை களஞ்சியங்களில் இருந்து படிப்படியாக குறைவடையவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வைத்தியசாலை களஞ்சியங்களில் இருந்து 20 வீத மருந்துகளே வழங்கப்படுவதாகவும், அவையும் எதிர்வரும் காலங்களில் நிறைவடையவுள்ளதாகவும் மருத்துவர் கிஷாந்த தசநாயக்க சுட்டிக்காட்டினார்.

தற்போது வைத்தியசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட நோயாளர்களுக்கு மாத்திரமே மருந்துகள் வழங்கப்படுவதாகவும் வயதான நோயாளிகளை விட இளம் நோயாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பெற்றோல் விநியோகம் இன்று...

கப்பலொன்று நாட்டை வந்தடையும் என ஏற்கனவே அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்திருந்த நிலையில், தவிர்க்க முடியாத காரணங்களினால் தாமதமாகி அந்தக் கப்பல் இன்று நாட்டை வந்தடையும் என்றும் அமைச்சர் நேற்று தனது டுவிட்டர் பதிவு மூலம் குறிப்பிட்டிருந்தார்.

அதற்கிணங்க நேற்றும் இன்றும் நாடளாவிய ரீதியில் மட்டுப்படுத்த அளவிலேயே பெற்றோல் விநியோகம் இடம்பெறும் என்று தெரிவித்துள்ள அவர், ஒட்டோ டீசல் நாடளாவிய ரீதியில் விநியோகிக்கப்பட்டு வரும் நிலையில் சுப்பர் டீசல் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டுக்கு வரவுள்ள கப்பலில் இருந்து பெற்றோல் இறக்கும் நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்படும் எனவும் ஓரிரு தினங்களில் வழமைபோன்று பெற்றோலை விநியோகிக்க முடியும் என்றும் அதற்கிணங்க டீசல் விநியோகத்தையும் முடிந்தளவு விரைவாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் நேற்றைய தினமும் சில எரிபொருள் நிலையங்களில் எரிபொருள் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நடைபெற்றதையும் காண முடிந்தது.

குறைந்த விலையில்...

செல்வராசா சுரேஸ்குமார் நேற்று முன்தினம் அதற்கான செய்முறை விளக்கத்தினை நிகழ்த்திக் காட்டியுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேங்காய் எண்ணெய், வேப்பெண்ணெய், சாம்பல் போன்ற இலங்கையில் இலகுவாக கிடைக்கும் மூலப்பொருட்களை வைத்து பயோ டீசலினை இலகுவாக தயாரிக்க முடியும்.

அதேபோன்று நீர் மற்றும் சிரட்டைக்கரி போன்ற காபன் வகைகளை பயன்படுத்தி பயோ பெற்றோலை இலங்கையில் உற்பத்தி செய்ய முடியும் என குறிப்பிட்டுள்ளார்.

இதற்கான தயாரிப்பு மாதிரி செய்முறை விளக்கமும் அவரால் நிகழ்த்திக் காட்டப்பட்டுள்ளது.

பயோ டீசலினை சாதாரணமாக வீட்டிலேயே செய்ய முடியும் எனவும், பயோ பெற்றோல் தயாரிப்பதற்கு சுமார் 50 மில்லியன் முதலீடு தேவைப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன் இதற்கு அனுசரணையாளர்களும், அரசின் ஒத்துழைப்பும் கிடைக்கும் பட்சத்தில் சூழலுக்கு பாதிப்பில்லாத எரிபொருளை மிக குறைந்த விலையில் உற்பத்தி செய்து எரிபொருள் பிரச்சனைக்கு தீர்வுகாண முடியும் எனவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

மின்சார வாகனம்...

அனுமதிக்கப்படும் என தொழிலாளர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார். ஜப்பான் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் நேற்றுமுன்தினம் (22) ஜப்பான் நோக்கிச் செல்லும் 12 பேர் கொண்ட பணியாளர்கள் குழுவுக்கும் இஸ்ரேலுக்கு பணிக்காகச் செல்லும் நான்கு பேர் கொண்ட குழுவுக்கும் விமானச் சீட்டு வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

புலம்பெயர் தொழிலாளர்களுக்கு வரியில்லா வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

தற்போது வாகன இறக்குமதி தடை செய்யப்பட்டுள்ளதால், வங்கி முறையின் மூலம் சட்டரீதியாக பணம் அனுப்பும் வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கு மட்டுமே இந்த வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

இந்தியாவுடன் பலமான இருதரப்பு..

தலைமையிலான இந்திய உயர் மட்ட தூதுக்குழுவுக்குமிடையில் நேற்று கொழும்பிலுள்ள பிரதமர் அலுவலகத்தில் முக்கிய பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இலங்கைக்கு தொடர்ந்தும் இந்தியாவின் உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கான அந்தப் பேச்சுவார்த்தையையடுத்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமது ட்விட்டர் பதிவில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேற்படி இந்திய தூதுக்குழு நேற்றுக்காலை இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டதுடன் நேற்று மதியம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டது. அதனையடுத்து நேற்று பிற்பகல் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுவார்த்தை நடத்தியது.

நேற்றைய இந்த பேச்சுவார்த்தையில் இந்திய வெளியுறவு செயலாளர் வினய் குவாத்ரா, இந்திய பொருளாதார விவகாரங்களுக்கான திணைக்களத்தின் செயலாளர் அஜய் ஷெத், இந்திய அரசாங்கத்தின் பிரதம பொருளாதார ஆலோசகர் கலாநிதி வீ. ஆனந்த நாகேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டுள்ளதுடன் இலங்கையின் சார்பில் மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன மற்றும் பிரதமரின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோரும் இந்த பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டனர்.(ஸ)

இலங்கைக்கு இந்தியா...

சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர். இதன்போதே இந்திய வெளியுறவு அமைச்சின் செயலாளர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்திய கடனுதவித் திட்டத்தின் கீழ் இதுவரை இலங்கைக்கு எரிபொருள், மருந்துப் பொருட்கள், உரவகைகள், அத்தியாவசிய உணவுப் பொருட்கள் ஆகியவற்றை இந்திய அரசாங்கம் வழங்கியுள்ளது. அது தொடர்பில் மீளாய்வு ஒன்றை

மேற்கொண்டுள்ள இந்திய தூதுக் குழுவினர் இலங்கைக்கு தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்குவதற்கு இந்திய அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயல்படுவதாகவும் தெரிவித்தது.

இதன்போது கருத்து தெரிவித்துள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நெருக்கடியான காலகட்டத்தில் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கி இந்திய அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு இலங்கை மக்கள் மற்றும் அரசாங்கத்தின் சார்பில் இந்திய அரசாங்கத்துக்கும் இந்திய மக்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாக குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரத் தன்மைக்கு கொண்டு வருவதற்காக இந்திய கடன் திட்டத்தின் கீழ் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பில் இரு தரப்பினருக்குமிடையில் நேற்று நீண்ட நேர பேச்சுவார்த்தையும் நடைபெற்றது.

நெருக்கடியான காலகட்டத்தைக் கடந்து விரைவில் நாடு இயல்பு நிலைக்குத் திரும்புமென இதன் போது இந்தியத் தூதுக் குழுவினர் நம்பிக்கை வெளியிட்டனர்.

இந்திய பொருளாதார தொடர்புகள் தொடர்பான செயலாளர் அஜய் செத், இந்திய பிரதம பொருளாதார ஆலோசகர் கலாநிதி வி. ஆனந்த நாகேஸ்வரன், இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, பிரதி உயர்ஸ்தானிகர் வினோத் கே. ஜேகப், இந்திய பசுபிக் வலய இணைச் செயலாளர் கார்த்திக் பாண்டே மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத் ஆகியோரும் இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டிருந்தனர்.

எரிபொருள் நிலையத்தில்...

சிலரால் அரச உத்தியோகத்தர்களை தரக்குறைவாக பேசும் செயற்பாடுகள் பரவலாக முன்னெடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் கடமைக்கு செல்ல எரிபொருள் பெற்றுக் கொள்ள சென்ற அந்த பெண் பதில் அதிபர் இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டார்.

இவ்விடயம் குறித்து அவர் கருத்து தெரிவிக்கையில், "கடமைக்கு செல்ல வந்த என்னை தரக்குறைவாக பேசுகின்றனர். கல்வி வேண்டாம், பெற்றோலே வேண்டும் என்கின்றனர்.

ஆசிரியர்கள் என்றால் தரக்குறைவானவர்கள் இல்லை. உங்கள் பிள்ளைகளுக்கே கல்வி புகட்டுகின்றோம். எங்களுக்கு முறையாக எரிபொருள் கிடைக்க வேண்டும். இல்லையேல் கற்பித்தல் செயற்பாட்டை முன்னெடுக்க முடியாது. நாகரீகமின்றி தரக்குறைவாக பேசுமளவிற்கு ஆசிரியர்கள் இல்லை. இதற்கு நியாயமான தீர்வு வேண்டும்.

அதுவரை ஆசிரியர்கள் பணிக்கு செல்லாது போராட வேண்டும். இந்த விடயம் தொடர்பில் கல்வி அமைச்சர் மற்றும் தொழிற்சங்கத்திற்கு அறிவித்துள்ளேன். நிரந்தரமான தீர்வு கிடைக்க வேண்டும். எமது கௌரவம் பாதுகாக்கப்பட வேண்டும்" என தெரிவித்தார்.

இதன்போது அவருடன் பொலிஸார் மற்றும் பொதுமக்கள் சிலர் கலந்துரையாடி போராட்டத்தை கைவிடுமாறு கோரியிருந்தனர். நிரந்தர தீர்வு எட்டப்பட வேண்டும் என கூறி போராட்டம் கைவிடப்பட்டதுடன், அவர் பாடசாலை கடமைக்கு செல்ல எரிபொருள் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இவ் விடயம் தொடர்பில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை ஒன்றையும் முன்வைத்து உள்ளது.

ஒவ்வொரு ஆசிரியரும் ஒவ்வொரு சமூகத்தின் விளக்குகள். தயவு செய்து எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களும் அரசாங்க அதிபர்களும் கல்வி அமைச்சும் கல்வித் திணைக்களமும் இதற்கு விரைந்து தீர்வுகாண வேண்டும் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கோரியுள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள செய்தி குறிப்பிலையே அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, தற்போது நாட்டில் உள்ள சூழ்நிலை எல்லோருக்கும் பொதுவானது.

ஆனால் ஆசிரியர்களின் கடமையும் அவர்கள் ஆற்றும் பணியும் வித்தியாசமானது. இந்த நிலையில் எரிபொருளுக்காக ஆசியர்களைக் காக்க வைப்பதும் அவர்களோடு அநாகரிகமாக நடந்து கொள்வதனையும் ஏற்க முடியாது.

சமூகத்தில் உள்ள குழந்தைகள் ஒவ்வொருவருக்கும் கல்வியூட்டி அவர்களைப் பெரியவர்களாக்கும் ஆசிரியர்களை எரிபொருள் நிரப்பு நிலையங்களில் அவமானப்படுத்து வமும் புறக்கணிப்பதும் அநாகரிகமானது.

இத்தகைய நிலை தொடருமாக இருந்தால் ஆசிரிய பணியில் இருந்து ஒதுங்கவேண்டிய நிலை ஏற்படும். இன்று கிளிநொச்சியில் ஒரு ஆசிரியை விட்ட கண்ணீர் ஒட்டுமொத்த ஆசிரியர்களும் விட்ட கண்ணீருக்குச் சமமானது" என அவ் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தண்டனையை குறைத்தது... (03ஆம் பக்கத் தொடர்)

மேல் நீதிமன்றத்தின் மதுரைக்கிளையால் 7 ஆண்டுகளாக குறைக்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து இந்தியாவை விட்டு வெளியேறுவதாக குற்றம் சுமத்தப்பட்டவர்கள் உறுதியளித்துள்ளனர். இந்தியாவில் இருந்து வெளியேறும் வரை ஏதிலி முகாம்களில் தங்கியிருக்கப்போவதாக அவர்கள் நீதிமன்றத்தில் உறுதியளித்தனர்.

பங்களாதேஷ்... (03ஆம் பக்கத் தொடர்)

சந்தர்ப்பம் காணப்படுவதாக சுட்டிக்காட்டிய உயர்ஸ்தானிகர், தற்போதைய நிலைமையை இலங்கையால் விரைவாக வெற்றிகொள்ள முடியுமென நம்பிக்கை தெரிவித்தார்.

டயர் தட்டுப்பாட்டால் 600... (03ஆம் பக்கத் தொடர்)

பேருந்துகளுக்கு, அரச பேருந்து சாலை எரிபொருள் நிரப்பு நிலையம் ஊடாக எரிபொருளை தொடர்ந்தும் வழங்குவதற்கு இலங்கை போக்குவரத்து சபை தீர்மானித்துள்ளது.

பால் உற்பத்தி, விவசாய... (03ஆம் பக்கத் தொடர்)

கோவிட்19 தாக்கத்தினால் இலங்கையில் பொருளாதார சவால்கள் எவ்வாறு மோசமடைந்துள்ளன என்பதை அமைச்சர் பீரிஸ் விளக்கினார்.

கணினி மற்றும் தகவல் தொழில் நுட்பம் போன்ற துறைகளுக்கு முக்கியத்துவமளித்து, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆகிய துறைகளிலான ஒத்துழைப்பின் வாயிலாக கல்வியை வாழ்வாதாரத்துக்கான பொருத்தமானதாக நிலையாக மாற்றுவது குறித்து இரு அமைச்சர்களும் கலந்துரையாடினர்.

காலநிலை மாற்றம், புவி வெப்பமடைதல் மற்றும் கடல் வளங்களைப் பாதுகாத்தல் போன்ற விடயங்களுக்கு இலங்கை மற்றும் நியூசிலாந்து ஆகிய இரு நாடுகளும் முக்கியத்துவம் அளித்துள்ள இச்சந்தர்ப்பத்தில், கடல் தொடர்பான பிரச்சினைகளில் ஒத்துழைப்பது குறித்தும் அவர்கள் கலந்துரையாடினர்.

நவீன உலகில் மனிதகுலத்தின் நன்மைக்கான சக்தியாக பொதுநலவாயத்தின் எதிர்காலம் பற்றிய எண்ணங்களை இரு அமைச்சர்களும் பகிர்ந்து கொண்டனர்.

கரீபியன் பிராந்தியத்துடன் வர்த்தகம், சுற்றுலா மற்றும் சர்வதேச அரங்குகளில் இணைந்து பணியாற்றுவது தொடர்பாக டொமினிகாவின் வெளிநாட்டமைச்சர் கலாநிதி. கென்னத் மெல்கோயர் டாரோக்ஸ் உடன் இருதரப்பு கலந்துரையாடல்களில் ஈடுபட்டார்.

தமிழக நிவாரண உதவிகள்...

தலைவர் செந்தில் தொண்டமான் நேற்று தெரிவித்தார்.

அத்துடன் தமிழகத்திலிருந்து இந்திய அரசாங்கத்தின் ஊடாக இலங்கைக்கு அனுப்பப்பட்ட 9,000 மெற்றிக் தொன் அரிசி இதுவரை இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் விநியோகிக்கப்பட்டுள்ளதாக செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், தெரிவித்த செந்தில் தொண்டமான், இதுவரை தமிழ் நாட்டில் இருந்து கிடைத்த உணவுகள் விநியோகிக்கப்பட்டமை தொடர்பில் சில இடங்களிலிருந்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக குறிப்பிட்டார்.

இதில் ஹப்புத்தளை, தொட்டிலா கல பிரதேசத்தில் பால் மா விநியோகத்துக்காக 50 ரூபா கோரப்பட்டமை தொடர்பில் விசாரணை கோரப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்த உணவு பொருட்களை இந்திய அரசாங்கம் கொழும்பு துறைமுகம் வரையில் எடுத்து வந்த பின்னர், இலங்கை அரசு விநியோகத்துக்காக 400 மில்லியன் ரூபாவை செலவிடுகிறது.இந்த விநியோகம் முழுமையாக அரச அதிபரின் கீழ் முன்னெடுக்கப்படுகிறது. பெருந்தோட்டங்களுக்கான விநியோகத்தில் தோட்ட முகாமைத்துவங்கள் உதவியளிக்கின்றன.

இதன்போது எரிபொருள் உட்பட்ட பல்வேறு சிரமங்களும் எதிர்கொள்ளப்படுவதாக செந்தில் தொண்டமான் குறிப்பிட்டார்.

தமிழகத்தின் இந்த உதவிப்பொருட்கள், இலங்கையின் அனைத்து பகுதிகளுக்கும் வழங்கப்படுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

குறிப்பாக தென்னிலங்கையின் மாத்தறைக்கு விநியோகம் நடைபெற்றுள்ளது. களுத்துறை பிரதேசத்துக்கான விநியோகம் எதிர்வரும் வாரங்களில் இடம்பெறுமென்றும் செந்தில் தொண்டமான் குறிப்பிட்டார்.

தமிழக அரசினால் இலங்கைக்கு அனுப்பப்படும் நிவாரணப் பொருட்களை தாங்கிய வி.டி.சி.சன் என்ற இரண்டாவது கப்பல் நேற்று மாலை கொழும்பு துறைமுகத்தை வந்டைந்தது. 48 கோடியே 30 இலட்சம் இந்திய ரூபா பெறுமதியான 14 ஆயிரத்து 712 தொன் அரிசி, ஏழு கோடியே 50 இலட்சம் பெறுமதியான 250 தொன் 'ஆவின்' பால்மா, 11 கோடி 90 இலட்சம் பெறுமதியான உயிர் காக்கும் மருந்துகள் என்பன இக் கப்பலில் உள்ளன. இவற்றின் மொத்த மதிப்பு 67 கோடியே 70 இலட்சம் இந்திய ரூபா என தமிழக அரசின் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசு மொத்தமாக 123 கோடி பெறுமதியான நிவாரண பொருட்களை இலங்கைக்கு அனுப்பிவைக்க முடிவு செய்ததோடு அதன் முதல் கட்டமாக 46 கோடி ரூபா பெறுமதியான பொருட்களை அனுப்பி வைத்திருந்தது. அவை வடக்கு, கிழக்கு, மலையகம் உட்பட பல பகுதிகளில் வாழும் உதவி தேவைப்படும் குடும்பங்களுக்கு இடையே பகிர்ந்தளிக்கப்பட்டன.

தற்போது வந்துள்ள நிவாரண பொருட்கள், இதுவரை வழங்கப்படாத மாவட்டங்களுக்கு அந்தந்தப் பகுதி மாவட்டச் செயலாளர்கள் ஊடாக வழங்கப்படும் என்று இ.தொ.கா. தலைவரும் நிவாரண பொருட்களை விநியோகிக்கும் செயற்பாட்டில் இணைப்பாளருமாக செயல்பட்டு வரும் செந்தில் தொண்டமான் தினகரனுக்குத் தெரிவித்தார்.

அனைவருக்கும் பால்மா வழக்கப்படவில்லை என்று கூறப்படுகிறதே என்று அவரிடம் கேட்டபோது, அனைவருக்கும் பால் மா வழங்கப்படுவதில்லை என்றும் கர்ப்பிணிகளுக்கும் சிறுவர் சிறுமியர் உள்ள குடும்பங்களுக்கு மட்டுமே பால்மா வழங்கப்படுவதாகவும் விளக்கமளித்த செந்தில் தொண்டமான், பெருந்தோட்டங்களுக்கு கூட்டுறவு சங்கம், டிரஸ்ட் நிறுவனம் மற்றும் சமுர்த்தி மூலமாக இவை பகிர்ந்தளிக்கப்படும் என்றார்.

பொருட்கள் இலவசமாகக் கிடைத்தாலும் அவற்றை ஒழுங்கு முறையாக எடுத்துச் செல்லும் வேலைத்திட்டத்துக்கான செலவுகளை பொறுப்றே் றிருப்பது யார் என்று கேட்டபோது, இதன் பொருட்டு திறைசேரி 400 மில்லியன் ரூபாவை ஒதுக்கித் தந்திருப்பதாக தினகரனிடம் தெரிவித்தார்.

99 வருட குத்தகை... (03ஆம் பக்கத் தொடர்)

போது கிடைத்துள்ள நிதி அதே போன்று மீதமுள்ள கடன் துறைமுக அதிகார சபை திறைசேரிக்கு பெற்றுக் கொடுத்துள்ளதாகவும் கடன் வட்டி வீதம் குறைந்த வீதத்தில் பெறப்பட்டதாகவும் துறைமுகத்தை நிர்மாணிப்பதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட கடனை மீளச் செலுத்தாமல் திறைசேரியானது அந்த நிதியை அரசாங்கத்தின் வேறு நடவடிக்கைகளுக்கு செலவிட்ட தாகவும் இதன் போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

திறைசேரியானது மேற்படி கடன் மற்றும் வட்டியை மீளச்செலுத்தியுள்ள நிலையிலும் கணக்குப் பதிவுகளில் அது உரிய விதத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை என்பதும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது.

கந்தப்பளை கொங்கோடியா தோட்ட காணி மோசடி;

உண்மைக்கு புறம்பானது ஆவணங்களுடன் நிரூபிப்பு

ஆ.ரமேஸ்

நுவரெலியா பிரதேச சபை அதிகாரத்திற்குட்பட்ட கந்தப்பளை கொங்கோடியா தோட்டத்தில் மோசடி செய்யப்பட்டதாக கூறப்படும் 80 பேர்ச்சஸ் காணி தொடர்பாக நுவரெலியா பிரதேச சபை தவிசாளர் வேலு யோகராஜிற்கு எதிராக பரப்பப்பட்டு வரும் மோசடி குற்றச்சாட்டு உண்மைக்கு புறம்பானது என்பதை ஆவணங்களுடன் நிரூபிக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா பிரதேச சபையில் அங்கம் வகிக்கும் 21 உறுப்பினர்கள் இது தொடர்பாக விளக்கம் கோரப்பட்டுள்ள நிலையில் பிரதேச சபையின் தவிசாளர் வேலு யோகராஜ் தலைமையில் நானுஓயா பிரதேச சபை பிரதான காரியாலய கூட்ட மண்டபத்தில் நேற்று வியாழக்கிழமை விசேட சபை அமர்வு இடம் பெற்றது.

இதன்போது சபை உறுப்பினர்களுக்கு இந்த காணி தொடர்பில் உண்மை தன்மையை கடித ஆதாரங்களுடன் தவிசாளர் உறுதிப்படுத்தினார்.

அத்துடன் தவிசாளர் சபையில் இக்காணி தொடர்பாக விளக்கமளித்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது,.

நான் இக்காணியை தனிப்பட்ட முறையில் விற்று விட்டதாக எனது வளர்ச்சிக்கும் கௌரவத்திற்கும் பாதிப்பு ஏற்படும் வகையில் ஊடகங்களில் சமூக வலைத்தளங்களில் தனிப்பட்ட குழுவால் செய்திகள் பரப்பி வருகின்றார்கள்.

நான் இக்காணியை விற்று ஏதாவது ஒரு தொகையை அல்லது வேறு வழியில் பணத்தை பெறவில்லை என்பதை உறுதியாக கூறுகின்றேன். யாருக்காவது இது சம்பந்தமாக சந்தேகம் இருப்பின் சட்டபூர்வமாக அதனை நிரூபிக்குமாறு அறிவிக்கின்றேன். ஊடகங்களில் இவ்வாறான பொய்யான செய்திகளை பரப்புவதை தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

நுவரெலியா பிரதேச சபை முன்மாதிரியான சபையாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதுடன் எனது வளர்ச்சியை மற்றும் எதிர்கால அரசியல் பயணத்தை தடுப்பதற்காக என்னுடன் மனஸ்தாபத்தில் இருக்கும் ஒரு குழுவினரால் இவ்வாறான பொய்யான வதந்திகளை பிரசாரம் செய்கின்றார்கள். சபையில் சட்டத் திட்டங்களுக்கு அமைவாகவும் விதிமுறைகளை பின்பற்றி நடைமுறைப்படுத்தும் சகல நடவடிக்கைகளிலும் முறைக்கேடுகள் நடைபெறுகின்றதென கூறுவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும். அதேபோன்று இவ்வாறான சூழ்நிலையில் மக்கள் சேவையை முன்னெடுப்பதில் அசௌகரியங்கள் ஏற்பட்டுள்ளது. எவ்வாறாயினும் தொடர்ந்தும் மக்கள் சேவையை முன்னெடுப்பேன் என உரையாற்றினார்.

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

ரூ.150,000 மில்லியன் திறைசேரி முறிகளை வழங்கல்

17.00% 2025 "A" தொடர்களின் கீழ் ரூ.60,000 மில்லியனையும் 18.00% 2028 "A" தொடர்களின் கீழ் ரூ.30,000 மில்லியனையும் 18.00% 2031 "A" தொடர்களின் கீழ் ரூ.60,000 மில்லியனையும் கொண்ட திறைசேரி முறிகள் 2022 யூன் 28ஆம் திகதி இடம்பெறும் ஏலங்களின் அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

இத்திறைசேரி முறிகளின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

தொடர்கள்	17.00% 2025 'A'	18.00% 2028 'A'	18.00% 2031 'A'
ISIN*	LKB00425F013	LKB00628A153	LKB00931E153
முன்வைக்கப்பட்ட தொகை	ரூ.60,000 மில்லியன்	ரூ.30,000 மில்லியன்	ரூ.60,000 மில்லியன்
நறுக்கு வீதம்	17.00% ஆண்டொன்றிற்கு	18.00% ஆண்டொன்றிற்கு	18.00% ஆண்டொன்றிற்கு
வழங்கப்பட்ட திகதி	2021 யூன் 01	2022 சனவரி 15	2022 மே 15
முதிர்வுத்திகதி	2025 யூன் 01	2028 சனவரி 15	2031 மே 15
நறுக்கு கொடுப்பனவுகள் செலுத்தப்படும் திகதிகள்	01 யூன் & 01 டிசம்பர்	15 சனவரி & 15 யூலை	15 மே & 15 நவெம்பர்
ஒன்று சேர்ந்த வட்டி வீதம்	ரூ.100 இற்கு ரூ. 1.3934	ரூ.100 இற்கு ரூ. 8.3039	ரூ.100 இற்கு ரூ. 2.2989
ஏலவிற்பனைத்திகதி	2022 யூன் 28, செவ்வாய்க்கிழமை		
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித்திகதியும் நேரமும்	2022 யூன் 28, செவ்வாய்க்கிழமை, மு.ப.11.00 மணி		
தீர்ப்பனவுத் திகதி	2022 யூலை 01		
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை	ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/=) அத்துடன் ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/- பெருக்கங்களிலிருந்து)		

முதனிலை வணிகர்களிடமிருந்து உண்மையான விலைகளின் (தொடர்கள் வழங்கப்பட்ட நாளிலிருந்து தீர்ப்பனவு செய்யும் நாள் வரையான ஒன்று சேர்ந்த வட்டி நீங்கலாக) அடிப்படையில் விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. விலைக்குறிப்பீடுகள் இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட மின்னியல் வலையமைப்பு முறைகளினூடாக மாத்திரமே மேற்கொள்ளப்படல் வேண்டும்.

ஒவ்வொரு தொடர்/ISIN தொடர்பிலும் சந்தை நிலைமைகளுக்கமைய முன்வைக்கப்பட்ட தொகையினை விஞ்சாத ஏதேனும் தொகையினை இலங்கை மத்திய வங்கி ஏற்றுக்கொள்ளலாம்

கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.

அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட்	2206297	என்எஸ்பீ பன்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட்	2425010
இலங்கை வங்கி	2541938	மக்கள் வங்கி	2206783
கெப்பிட்டல் எலையன்ஸ் லிமிடட்	2317777	சம்பத் வங்கி பிஎல்சி	2305842
இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி	2332319	செலான் வங்கி பிஎல்சி	2456340
ப்வெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி	2639883	வெல்த்றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட்	2675096

* பன்னாட்டு பிணையங்கள் அடையாள இலக்கம்

எம்.இசட்.எம்.ஆசிம்
பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்

வழங்கும் அலுவலகம்
பொதுப்படுகடன் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி,
30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு-1.
தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687
வெப்தளம் : www.cbsl.gov.lk

இலங்கை கோவிட்-19 அவசரகால பதில் மற்றும் சுகாதார முறைமைகள்
தயார்நிலை திட்டம் – சுகாதார அமைச்சு

விலைக்கோரலுக்கான வேண்டுகோள்

(ஒற்றைக் கடிதவுறை விலைக்கோரல் முறை)

நாடு: இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு
திட்டத்தின் பெயர்: இலங்கை கொவிட்-19 அவசரகால பதில் மற்றும் சுகாதார முறைமைகள் தயார்நிலை திட்டம், சுகாதார அமைச்சகம்
ஒப்பந்தத் தலைப்பு: அங்கொடயில் உள்ள தேசிய தொற்று நோய்கள் நிறுவனத்தில் (NIID) முன்மொழியப்பட்ட தேசிய தனிமைப்படுத்தல் நிலையம்
கடன் இல: 6595-lk
RFB குறிப்பு இல: LK-MOH-252402-CW-RFB

1. இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு உலக வங்கியிடமிருந்து இலங்கையின் COVID-19 அவசரநிலைப் பதில் மற்றும் சுகாதார அமைப்புகளுக்கான தயாரிப்புத் திட்டத்திற்கான நிதியுதவியைப் பெற்றுள்ளது என்பதுடன் முன்மொழியப்பட்ட தேசிய தனிமைப்படுத்தலைப் பெறுவதற்கான ஒப்பந்தத்தின் கீழ் நிதியுதவியின் ஒரு பகுதியை தேசிய தொற்று நோய்கள் நிறுவகத்தின் (NIID), அங்கொடயில் நிர்மாணிக்கப்படவுள்ள தேசிய தனிமைப்படுத்தல் நிலையத்தின் கீழான கொடுப்பனவுகளுக்குப் பயன்படுத்த விரும்புகிறது.

2. அங்கொடயில் உள்ள தேசிய தொற்று நோய்களுக்கான தேசிய நிறுவனத்தில் (NIID) உத்தேச தேசிய தனிமைப்படுத்தல் மையத்தை நிர்மாணிப்பதற்கான தகுதியான மற்றும் தகுதிவாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை சுகாதார அமைச்சின் செயலாளரின் சார்பாக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைக் குழுவின் தலைவர் இப்போது அழைக்கிறார், இதன் மதிப்பீட்டுச் செலவு 1,438 மில்லியன் ரூபாய்.

   ஐந்து மாடிகள் கொண்ட கட்டிடம் வலுவூட்டப்பட்ட கொங்கிறீட் அமைப்பு மற்றும் அடித்தளப் பகுதியைக் கொண்டுள்ளது, BOQ/வரைபடத்தில் விவரிக்கப்பட்டுள்ளபடி, தீவிர சிகிச்சைப் பிரிவு (ICU), தனிமைப்படுத்தப்பட்ட அறைகளுடன் கூடிய தொற்று நோய்களுக்கான சிறப்பு சிகிச்சைப் பிரிவு ஆகியவற்றைக் கொண்டுள்ளது. நிர்மாணக் காலம் 455 நாட்கள்.

3. உலக வங்கியின் IPF கடன் வாங்குபவர்களுக்கான கொள்வனவு விதிமுறைகள் 4வது பதிப்பு, 2020 நவம்பரில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, விலைக்கோரலுக்கான வேண்டுகோளைப் (RFB) பயன்படுத்தி தேசிய போட்டி விலைக்கோரல் நடைமுறை மூலம் விலைக்கோரல் நடாத்தப்படும், மேலும் கொள்வனவு ஒழுங்குவிதிகளில் வரையறுக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் தகுதியுள்ள அனைத்து விலைமனுதாரர்களும் இதில் பங்குபற்றலாம்.

4. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதியைப் பெற, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலில் இல்லாதவராகவிருத்தல் வேண்டும் என்பதுடன் கட்டிட நிர்மாணத்தில் விசேடத்துவம் C1 அல்லது அதற்கு மேற்பட்ட CIDA பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் பின்வரும் முகவரியிலுள்ள செயற்றிட்ட பணிப்பாளரிடம் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை 2022 ஜூன் 24ஆம் திகதி முதல் 2022 ஜூலை 14ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் பின்வரும் முகவரியில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2022 ஜூன் 24ஆம் திகதி முதல் 2022 ஜூலை 14ஆம் திகதி வரையான சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் பின்வரும் முகவரியிலுள்ள செயற்றிட்டப் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான கோரிக்கையொன்றைச் செய்து மற்றும் மீளளிக்கப்படாத கட்டணமாக 100,000.00 (ஒரு இலட்சம் ரூபாய்) ரூபாவைச் செலுத்தியதன் பின் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கட்டணத்தை இலங்கை வங்கியின் தப்ரபேன் கிளையில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் பேணப்படும் 7040244 எனும் கணக்கிலகத்திற்கு வைப்புச் செய்து அதற்காகப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்காகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

7. விலைமனுக்களை 2022 ஜூலை 15ஆம் திகதி மு.ப. 10.30 மணி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். இலத்திரனியல் விலைமனுக்கள் அனுமதிக்கப்படமாட்டாது. தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். இந்நிகழ்வில் கலந்துகொள்ள விரும்பும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் கலந்துகொள்ளலாம் என்பதுடன் அவர்களின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

8. அனைத்து விலைமனுக்களுடனும் 15,000,000.00 இல. ரூபா (பதினைந்து மில்லியன் இல. ரூபா மட்டும்) பெறுமதியான விலைமனுப் பிணை முறி இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

9. விலைக்கோரலுக்கு முந்திய கூட்டமொன்று 2022 ஜூலை 04ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு அங்கொடயில் உள்ள தேசிய தொற்று நோய் நிறுவனத்தில் ஏற்பாடு செய்யப்படும். விலைமனுக்களைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் அல்லது தள ஆய்வுகளில் கலந்துகொள்வது தொடர்பாக விலைமனுதாரர்களுக்கு ஏற்படும் எந்தச் செலவுகளுக்கும் வேலை வழங்குநர் பொறுப்பாகமாட்டார்.

10. மேலே குறிப்பிடப்பட்ட முகவரி

செயற்றிட்டப் பணிப்பாளர்,
இலங்கை கொவிட்-19 அவசரகால பதில் மற்றும் சுகாதார முறைமைகள் தயார்நிலை திட்டம்,
4வது மாடி, ஜே. ஆர். ஜயவர்தன நிலையம்,
191, தர்மபால மாவத்தை, கொழும்பு -07, இலங்கை
தொலைபேசி 094112674797
தொலைநகல் 094112674342
மின்னஞ்சல்: tender.covid19erhsp@gmail.com

தலைவர்
பிரதேச செயலாளர் வி.பபாகரன் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் பிரதேசத்தில் உள்ள ஆலயங்கள் மற்றும் இந்து அமைப்புக்கள், விளையாட்டுக் கழகங்கள், சமூக அமைப்புக்கள், கிராம அபிவிருத்தி சங்கங்கள், பெண்கள் அமைப்புக்கள் என பல்வேறு அமைப்புக்களின் பிரதிநிதிகள், கிராம உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக கிராம உத்தியோகத்தர்களுக்கான நிருவாக உத்தியோகத்தர் பரிமளவாணி சில்வெஸ்டர், சிரேஷ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.பி.ரவிச்சந்திரன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

இதன் போது உரையாற்றிய பிரதேச செயலாளர், "ஆலையடிவேம்பில் அண்மைக் காலமாக மீண்டும் சட்டவிரோத செயற்பாடுகள் தலைதூக்கியுள்ளன. இதனைத் தடுப்பதற்கு பிரதேச செயலாளர் ஆகிய என்னால் மாத்திரம் முடியாது. ஆகவேதான் சமூக அமைப்புக்களாகிய உங்களது பங்களிப்பை எதிர்பார்க்கின்றேன். இச்செயற்பாட்டில் அனைவரும் இணைந்து பயணிப்போமால் வெற்றி பெறுவது இலகு" என்றார்.

"இப்பிரதேசத்தில் உள்ள 90 வீதமானவர்கள் நல்லவர்களே. ஆனால் மிகுதியான 10 வீதமானவர்களின் செயற்பாடுகளே பிரதேசத்தை ஒட்டுமொத்தமாக குழப்புகின்றன. ஒரு குடம் பாலில் ஒரு துளி விஷம் கலப்பது போன்றது அவர்களின் செயற்பாடு. ஆகவே அதனைத் தடுப்பது நமது ஒவ்வொருவரினதும் கடமை. இல்லையேல் நமது சந்ததி நிம்மதியாக வாழ முடியாது" என்றார்.

"குற்றச் செயல்களைத் தடுப்பதற்கு பொறுப்பானவர்கள் நடவடிக்கை எடுக்காவிடின் அதனை உயர் மட்டத்திற்கு தெரிவிப்போம். குறிப்பாக ஆலயங்களின் நடைபெறும் அசம்பாவிதங்கள் தொடர்பாக சம்பந்தப்பட்டோரை அடையாளப்படுத்துவது நமது கடமை. இந்த விடயத்தில் பொலிசாரின் உதவிக்கு மேலதிகமாக இராணுவத்தின் உதவியை பெறுவோம்" என்றார் அவர். மேலும் குற்றத்தை தடுப்பதற்கான படிமுறைகள் பற்றியும் இங்கு தெளிவுபடுத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் பல்வேறு தலைவர்களும் கருத்து வெளியிட்டதுடன் ஒட்டுமொத்தமாக பொலிசாரின் திருப்தியற்ற நடவடிக்கையே குற்றச்செயல்கள் அதிகரிப்பதற்கு காரணம் என்றனர். அத்தோடு பிரதேச செயலாளர் எடுக்கும் நடவடிக்கைக்கு தாம் எப்போதும் உறுதுணையாக இருப்பதுடன், நீண்ட காலத்தின் பின்னர் துணிச்சலாக பிரதேசத்தின் மீது பற்றுடன் செயற்படும் பிரதேச செயலாளருக்கு நன்றி தெரிவித்தனர்.

வி.சுகிர்தகுமார்
(வாச்சிக்குடா விஷேட நிருபர்)

காட்டுயானை தாக்கி குடும்பஸ்தர் பலி

அநுராதபுரம் தினகரன் நிருபர்

அநுராதபுரம் சாலியபுர பகுதியில் காட்டுயானையின் தாக்குதலுக்குள்ளான குடும்பஸ்தர் ஒருவர் சம்பவயிடத்திலேயே,உயிரிழந்தாக அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

சாலியபுர மகாவித்தியாலயத்திற்கு அருகிலுள்ள வடக்கு ரயில்பாதையை அண்மித்துள்ள காட்டுப்பகுதியில்,இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் குறிப்பிட்டனர். சாலியபுர,மாங்கடவள,மங்களபுர பகுதியை வசிப்பிடமாக கொண்ட 43 வயதுடய குடும்பஸ்தரே இச்சம்பவத்தில் உயிரிழந்தார். சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது. இந்பரை தாக்கிய காட்டுயானை,எங்கும் செல்லாது அவரது சடலம் கிடந்த காட்டுக்கு அருகில் நின்றது.

இதனால், வனஜீவராசிகள் திணைக்கள பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸாரது பாதுகாப்புடன் பாரிய சிரமத்திற்கு மத்தியில் அவ்விடத்திலிருந்து சடலத்தை எடுக்க முயற்சிக்கப்பட்டது. பின்னர் காட்டுயானையை அப்பகுதியிலிருந்து துரத்துவதற்கு வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளும், பிரதேச மக்களும் நடவடிக்கை எடுத்தனர். பிரேத பரிசோதணைகளை மேற்கொள்வதற்காக பிரேதம், அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கிருமிநாசினி பதுக்கல், கூடுதல் விலைக்கு விற்றால் உரிமையாளர்களுக்கெதிராக வழக்கு தாக்கல்

ஒலுவில் விசேட நிருபர்

அம்பாறை மாவட்டத்தில் உரம் மற்றும் கிருமிநாசினிகளை சட்டவிரோதமாக பதுக்கி வைத்து கூடுதல் விலைக்கு விற்பனை செய்த கிருமி நாசினி விற்பனை நிலைய உரிமையாளர்களுக்கெதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளதாக, நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் அம்பாறை மாவட்ட பொறுப்பதிகாரி சாலிந்த நவரத்ன பண்டார தெரிவித்தார்.

உரம் மற்றும் கிருமிநாசினிகள் அதிகூடிய விலைக்கு விற்பனை செய்யப்படுவதாகவும், பொறிக்கப்பட்டுள்ள விலை அழிக்கப்பட்டு புதிய விலை பொறிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுவதாகவும் விவசாயிகளால் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபைக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இம் முறைப்பாட்டையடுத்து சம்மாந்துறை நீதவான் நீதிமன்ற நியாயாதிக்கத்திக்குட்பட்ட அட்டப்பள்ளம், நிந்தவூர், சம்மாந்துறை ஆகிய பிரதேசங்களில் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட திடீர் பரிசோதனையின் போது அதிகூடிய விலைக்கு கிருமி நாசினிகள், உர வகைகள் மற்றும் காலாவதியான பாவனைக்குதவாத கிருமிநாசினிகள் விற்பனை செய்த வியாபாரிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும், இவர்களுக்கெதிராகவே வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாகவும் தெரிவித்தார்.

மூதூர் பழங்குடி மக்களின் காணி பிரச்சினையை தீர்க்க விசேட குழு

ஆளுநர் ஸ்தாபிப்பு

தம்பலகாமம் குறூப் நிருபர்

மூதூர் நல்லூர் பகுதியில் வசிக்கும் ஆதிவாசி மக்களின் காணி பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் விசேட கவனம் செலுத்தியுள்ளார்.

யுத்தம் காரணமாக கைவிடப்பட்ட காணிகளில் பல்வேறு மக்கள் குடியேற்றப்பட்டுள்ளதுடன், தமது காணிகளை மீள வழங்குமாறு பூர்வீகக் குடிகள் கடந்த 2009ஆம் ஆண்டு முதல் கோரிக்கை விடுத்து வருகின்றனர். ஆனால், அந்த கோரிக்கைகள் மீது கவனம் செலுத்தப்படாததால், ஆதிவாசிகள் தங்களது குறைகளை ஆளுநரிடம் விளக்கினர்.

அதனைத் தொடர்ந்து திருகோணமலை மாவட்ட அபிவிருத்திக் குழுவில் பல தடவைகள் பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. இது தொடர்பில் ஆராய்வதற்காக ஆளுநர் அண்மையில் மூதூர் பிரதேச செயலகத்திற்கு விஜயம் செய்திருந்தார்.

பூர்வீக குடி மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி, இந்தக் காணிகளில் தற்போது வசிப்பவர்கள் குழுவும் வருகை தந்திருந்தனர். இருதரப்பு கருத்துகளையும் ஆளுநர் இதன் போது எடுத்துரைத்தார்.

அடுத்த வாரத்திற்குள் பிரச்சினைக்கு தீர்வு காண விசேட குழுவை நியமித்தார்.

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

வெளிவாரிப் பட்டப்படிப்புகள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையம்

முதலாம் வருட முதலாம் பருவ வியாபார நிருவாக இளமாணி வெளிவாரிப் பட்டப்படிப்பு பரீட்சைகள் - 2016/ 2017

தென்கிழக்குப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையத்தினால் நடாத்தப்படுகின்ற (2016/ 2017ஆம் கல்வியாண்டு) முதலாம் வருட முதலாம் பருவ வியாபார நிருவாக இளமாணி பரீட்சைகள் எதிர்வரும் 02.07.2022ஆம் திகதி முதல் நடைபெறவிருக்கின்றன. இப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை வெளிவாரிப் பட்டப்படிப்புகள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையத்தில் (CEDPL) பெற்றுக்கொள்ளமுடியும்.

மேலதிக விபரங்களுக்கு 067-2052801 எனும் தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்புகொள்ளுமாறு கேட்கப்படுகின்றீர்.

பதிவாளர்,
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்,
21.06.2022

இலங்கை வங்கி

ஏலவிலை கூறலுக்கான அழைப்பு (IFB)

இலங்கை வங்கி கண்டி 2ஆம் நகரக் கிளையின் IIஆம் கட்டத் திருத்த வேலைகள்.

கேள்விப்பத்திர இல : BOC/PROP/P/2021/227

1. இலங்கை வங்கி சார்பாக, இலங்கை வங்கி தொகுதி பெறுகைக் குழுவின் தலைவரிடமிருந்து இலங்கை வங்கி கண்டி 2ஆம் நகரக் கிளையின் IIஆம் கட்டத் திருத்த வேலைகளைக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வகையில் திருத்துவதற்கு தகுதியான நபர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட ஏலவிலைகள் கோரப்படுவதுடன் இதற்கு ரூ. 200 மில்லியன் (VAT இன்றி) செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

   வேலையானது உடைத்தல் மற்றும் திருத்துதல், அகழ்வு வேலைகள், நில வேலைப்பாடுகள், RCC அமைப்புகளை அமைத்தல், கட்டுமான வேலைகள், நீர்ப்புகா வேலைகள், இரும்பு வேலைகள், கூரைகள் அமைத்தல் மற்றும் பீலிகள் அமைத்தல், தரை, சுவர் மற்றும் உட்கூரைப் பூச்சுகள் மற்றும் MEP தொடர்பான வேலைகள் போன்றவற்றை உள்ளடக்கிய தற்போதுள்ள இலங்கை வங்கிக் கண்டி 2ஆம் நகரக் கிளையின் கட்டுமான / புதுப்பித்தல் வேலைகளைக் கொண்டிருக்கும். அண்ணளவான தரைப்பரப்பானது 41,000 சதுர அடிகளாகும் இக் கட்டடத்திற்கு பசுமைச் சான்றிதழானது பெற எதிர்பார்க்கப்படுகின்றது.

   இடமானது இலக்கம் 30, ஸ்ரீ தலதா வீதி, கண்டியில் அமைந்துள்ளது.

   இவ்வேலைகளை பூர்த்திசெய்வதற்க்கான காலம் ஆரம்பத் திகதி தொடக்கம் 365 நாட்காட்டி நாட்கள் ஆகும்.

2. தேசிய போட்டிகர ஏலவிலை நடைமுறைக்கமைய (NCB) ஏலவிலை கூறல்கள் மேற்கொள்ளப்படும்

3. ஒப்பந்தத்தை வழங்குவதற்குத் தகைமை பெறுபவர் புறக்கணிக்கப்பட்ட பெயர்ப்பட்டியலில் காணப்படாதிருக்க வேண்டியதுடன் கீழ்க் காணும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

   அ. நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் (CIDA) கட்டட நிர்மாண வேலைத்துறையில் தரம் C2 அல்லது C3 மட்டத்தில் பதிவுசெய்யப்படிருக்க வேண்டும்.

4. ஒப்பந்தத்தை வழங்க தகைமை பெறுவதற்கு பூர்த்தி செய்ய வேண்டிய கட்டாயத் தேவைப்பாடுகள்

   அ. கடந்த ஐந்து வருட காலத்தினுள் குறைந்தது ரூ.300 மில்லியன் சராசரி வருடாந்தப் பணப் புரள்வுடைய நிர்மாண வேலையை நிறைவேற்றியிருத்தல்.

   ஆ. கடந்த ஐந்து வருட காலத்தினுள் குறைந்தபட்சம் ரூ.160 மில்லியன் பெறுமதியுடைய அடுக்குமாடிக் கட்டடமொன்றை 365 நாட்களுக்குள் புதிதாகக் கட்டி / திருத்தியிருக்க வேண்டும். அல்லது இதனைவிடப் பெரிய கருத்திட்டமொன்றை அதற்குரிய காலப்பகுதியினுள் முடித்திருக்க வேண்டும்.

   இ. திரவநிலை சொத்துக்கள் அல்லது சிறப்பாகக் கட்டுமானத் திட்டத்துக்கென்றே வழங்கப்படும் சுழற்சி முறைக் கடன்கள் (வேறு ஒப்பந்த பொறுப்புகளுக்கு ஒதுக்கிய பின்பு) மற்றும் இவ் ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ள உள்ள எவையேனும் முற்பணக் கொடுப்பனவு தவிர்த்து ரூ.50 மில்லியனை விடக் குறைவாகக் காணப்படலாகாது

5. இவ்விலை கூறலில் பங்குகொள்ள ஆர்வமுடையோர் கொழும்பு 01, இலங்கை வங்கி மாவத்தை, இல.01, "BOC சதுக்கம்", 14ஆம் தளம், சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி, பிரதான முகாமையாளரின் அலுவலகத்தில் (தொலைபேசி இல. 011-2544310, 011-2204260 தொலைநகல் 011-2449629 மின்னஞ்சல் முகவரி : procurement@boc.lk) மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன் விலைகூறல் ஆவணங்களை 2022.06.24ஆம் திகதி தொடக்கம் 2022.07.21ஆம் திகதி வரை வேலை நாட்களில் 0900 மணி முதல் 1400 மணிவரை இலவசமாகப் பார்வையிடலாம்.

6. விலைகூறல்களைத் தெரிவிக்க ஆர்வமுடையோர் ஆங்கில மொழியிலான விலைகூறல் ஆவணத்தொகுதியை திருப்பிச் செலுத்தாக் கட்டணம் ரூ.முப்பத்து ஒன்பதாயிரத்து இருநூறு மட்டும் (ரூ.39,200/- (VAT உடன்) (ரூ.35,000.00 + ரூ.4,200.00 VAT) மாத்திரம் 2022.06.24 தொடக்கம் 2022.07.21 வரை எவையேனும் வேலை நாட்களில் 0900 மணி முதல் 1400 மணிவரை கொழும்பு 01, இலங்கை வங்கி மாவத்தை, இல. 01, "BOC சதுக்கம்", 14ஆம் தளம், சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி, பிரதான முகாமையாளரின் அலுவலகத்தில் எழுத்து மூலமான விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் பேரில் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவு முறை பணமாகும்.

7. நகலுடனான முத்திரையிட்ட விலைகூறல்களை 2022.07.22 திகதி 1000 மணிக்கு அல்லது அதற்கு முன் கொழும்பு 01, இலங்கை வங்கி மாவத்தை, இல. 01, "BOC சதுக்கம்", தரைத் தளத்தில் உள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் இட வேண்டும் தாமதித்து கிடைக்கும் விலைகூறல்கள் திறக்காது திருப்பி அனுப்பப்படும். விலை கூறல்கள் முடிவடைந்ததும் அவை விலைகூறுவோர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் குறிப்பிடப்பட்ட முகவரியின் மூன்றாவது தளத்தில் திறக்கப்படும்..

8. ஏலவிலை கூறல்கள் 2022.10.20 வரை செல்லுபடியாகும்

9. பூரணப்படுத்தப்பட்ட ஏலவிலை கூறல்களானவை (விலைகூறல்) நியமப் படிவங்கள் பிரிவு IIஇல் உள்ளடக்கப்பட்டுள்ள (மாற்றமுடியாத, நிபந்தனையற்ற, தேவையின்போதான) விலைகூறல் பிணைப் படிவத்தைப் பயன்படுத்தி இலங்கை வங்கி தவிர்ந்த இலங்கையில் செயற்படும் வேறொரு உரிமம் பெற்ற வணிக வங்கியிடமிருந்து மாத்திரம் வங்கி உத்தரவாதத்தின் வடிவில் பெற்ற 2022.11.17 ஆம் திகதி வரை செல்லுபடியாகும் ரூ.2,000,000/- (ரூ.இரண்டு மில்லியன் மாத்திரம்) பெறுமதியான விலைகூறல் பிணை முறியுடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும் அல்லது விலைகூறல் பிணைமுறிக்குப் பதிலாக பணவைப்பு ரசீது / வங்கிக் காசோலை ஏற்றுக்கொள்ளப்படும்.

10. 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்கப் பொது ஒப்பந்தச் சட்டத்தில் அல்லது அதன் திருத்தங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய விலைகூறலுடன் PCA3 படிவத்தையும் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

11. முன்கூட்டிய ஏலவிலை கூறல் கூட்டம் 2022.07.05ஆம் திகதி 1100 மணிக்கு 30, ஸ்ரீ தலதா வீதி, கண்டியில் அமைந்துள்ள இலங்கை வங்கிக் கிளையில் இடம்பெறும்.

தலைவர்
தொகுதி பெறுகைக் குழு,
இலங்கை வங்கி,
இல 01, "BOC சதுக்கம்",
இலங்கை வங்கி மாவத்தை,
கொழும்பு 01

www.boc.lk

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

இலங்கை புகையிரத சேவைகள்

விலைமனுக்களுக்கான அழைப்பு

தெமட்டகொட RUNNING SHED இன் உள்ள கழிக்கப்பட்ட வடிகட்டிகள் (FILTERS) மற்றும் இரத்மலானை ரெயில்வே களஞ்சியத்திலுள்ள SCRAP களை அகற்றுதல்

ஒப்பந்த இல. SRS/F. 7744

01. தெமட்டகொட Running shed மற்றும் இரத்மலானை ரெயில்வே களஞ்சியத்திலுள்ள கீழ்க்காணும் உருப்படிகளை அகற்றுவதற்காக தேசிய போட்டி விலைமனுக்கோரல் முறையில் பொறியிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை, கொழும்பு -10, ஒல்கொட் மாவத்த இலங்கை புகையிரத சேவையின் திணைக்கள பெறுகைக் குழு பாரிய தலைவர் பெற்றுக் கொள்வார்.

உருப்படி இல.	விபரம்	அமைவிடம்	எண்ணிக்கை (அண்ணளவாக)
01	கழிக்கப்பட்ட வடிகட்டிகள் (Filters)	தெமட்டகொட Running shed	1500
02	இரும்புத்துகல்கள் (Scrap)	இரத்மலானை ரெயில்வே களஞ்சியம்	600 மெ/தொன்
03	சக்கரங்கள் மற்றும் டயர்கள்	இரத்மலானை ரெயில்வே களஞ்சியம்	750 மெ/தொன்
04	ரேடியேட்டர்கள்	இரத்மலானை ரெயில்வே களஞ்சியம்	15 மெ/தொன்

02. விலைமனுக்கள் 2022.07.19ம் திகதி பி.ப. 2.00 இற்கு மூடப்படும்.

03. ஓர் மீளளிக்கப்படாத ஆவணக்கட்டணமாக ரூபா 2450.00 (இரண்டாயிரத்து நாநூற்றி ஐம்பது) செலுத்துவதன் பேரில் 2022.07.18ம் திகதி பி.ப. 3.00 மணி வரை இலங்கை, கொழும்பு -10, ஒல்கொட் மாவத்த, பிரதி பொது முகாமையாளர் (பெறுகை) அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்படும் படிவங்களில் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

04. விலைமனுவுடன் விலைமனு ஆவணங்களில் குறிப்பிடப்படுமாறு ரூபா. 1,000,000.00 (ஒரு மில்லியன் ரூபா) தொகையில் ஓர் விலைமனுப் பிணையை சமர்ப்பித்தல் வேண்டும்.

05. பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகை) இன் அலுவலகத்தில் விலைமனுக்கள் மூடப்பட்டவுடன் உடனடியாகத் திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் வேலையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

06. பொறியிடப்பட்ட விலைமனுக்கள் பதிவுத் தபாலில் அல்லது கையோடு கொண்டுவந்து கீழ்க்காணும் முகவரியில் சமர்ப்பித்தல் வேண்டும்.

தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு (பாரிய),
இலங்கை புகையிரத சேவைகள்,
பிரதிப் பொது முகாமையாளர் அலுவலகம் (பெறுகை),
த.பெ. எண் 1347, ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு -10.

07. விலைமனு ஆவணங்களை பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகை) இன் அலுவலகத்தில் இலவசமாக பரிசீலிக்கலாம்.

தொ.பே. இலக்கங்கள்: 94(11)2438078 அல்லது 94(11)2436818
பெக்ஸ் இல: 94(11)2432044
மின்னஞ்சல்: tender2@railway.gov.lk
இணையதளம்: www.railway.gov.lk

தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு (பாரிய),
இலங்கை புகையிரத சேவைகள்.

தொடர்பு இல. SRS/F. 7744

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
வனசீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சு

வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்

விலைமனு அழைத்தல்

உடவளவை யானைகள் சரணாலயத்தின் நோய்வாய்ப்பட்ட விலங்குகளிற்காக பால் மா கொள்வனவு செய்தல்

WL/02/17/87/Milk-2/2022

வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின், திணைக்களப் பெறுகைக் குழுவின் தலைவரினால் உடவளவை யானைகள் சரணாலயத்தின் யானைக் குட்டிகளிற்காக 2022/ 2023 வருடங்களில் பால் மாவை பின் வருமாறு கொள்வனவு செய்வதற்காக தகைமையுள்ள மற்றும் ஆர்வமுள்ள உற்பத்தியாளர்கள் மற்றும் தேசிய முகவர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

உருப்படி	அமைவிடம்	மாதாந்தம் வழங்கப்பட வேண்டிய எண்ணிக்கை Kg	2022/ 2023 ஆண்டில் வழங்கப்பட வேண்டிய மொத்த அளவு Kg
குழந்தை பால்மா சூத்திரம் மட்டம் 1 பி.∴ பிடொபெக்டீரியம் லெக்டிஸ் புரபயொடிக் ஸ்ட்ரேன் அடங்கியுள்ள குறைந்தபட்சம் 70% வே புரோடீன் அடங்கியுள்ள Infant milk Formula Stage 1-1 Minimum 70% whey Protein. 2. Probiotic Strain - Bifidobacterium Lactis	உடவளவை யானைகள் சரணாலயம்	42	504

1. விலைமனுக் கோரல், தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக் கோரும் முறைமையின் கீழ் மேற்கொள்ளப்படும்.
2. இதற்காக ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2022.07.14 வரை வார வேலை நாட்களில் அலுவலக நேரங்களிள் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.00 வரை, பத்தரமுல்ல, வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் கணக்குப்பிரிவில் விலைமனுப்படிவங்களை இலவசமாகப் பரிசீலனை செய்து கொள்ளலாம்.
3. ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள விலைமனுப்படிவங்களை, மு.ப. 9.00 முதல் பி.ப. 2.00 வரை 2022.07.14 வரை வனசீவராசிகள் பணிப்பாளர் நாயகம், வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் என்ற பெயருக்கு, சுய கடிதத்தலைப்பில் விண்ணப்பக்கடிதமொன்றுடன், காசாக ரூபா 1,000.00 இற்கான மீளளிக்கப்படாத வைப்புத் தொகையை, திணைக்களத்தின் சிறாப்பரிடம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
4. விலைமனுக்களுடன் ரூபா 25,000.00 இற்கான விலைமனுப் பிணையமொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன், அது விலைமனுப்படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, அரச அங்கீகாரம் பெற்றுள்ள வணிக வங்கியொன்றிலிருந்து அல்லது வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் சிறாப்பருக்கு 2022.07.15 அன்று பி.ப. 2.00 இற்கு முன்னர் பணத்தைச் செலத்திப் பெற்றுக்கொள்ளலாம் விலைமனுப் பிணையம் இணைக்கப்பட்டிராத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
5. விலைமனுப் பிணையமானது, விலைமனுத் திறக்கப்படும் தினத்திலிருந்து குறைந்தபட்சம் 90 நாட்களிற்குச் செல்லுபடியாகுதல் வேண்டும்.
6. பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்கள், மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென தனித்தனி உறைகளில் சேர்த்து முத்திரையிட்டு மீண்டும் ஒருறையில் சேர்த்து முத்திரையிட்டு, அவ்வுறையின் இடது பக்க மேல் மூலையில், 'உடவளவை யானைகள் சரணாலய யானைக்குட்டிகளிற்கு பால் மாவைக் கொள்வனவு செய்தல் 2022-WL/02/17/87/ Milk-2/2022' எனக்குறிப்பிட்டு, 2022.07.15 அன்று பி.ப. 2.00 இற்கு முன்னர் பின்வரும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அல்லது வனசீவராசிகள் திணைக்களத்தின் நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்த்தல் மேற்கொள்ளாமென்பதுடன், தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுத்திறத்தல் அன்றைய தினம் பி.ப. 2.00 இற்கு மேற்கொள்ளப்படுவதுடன் அவ்வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரின் அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.
7. இது தொடர்பான மேலதிக விபரங்களை 0112-871537 தொலைபேசி மூலம் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் (நிதி)யை அழைத்துப் பெற்றுக் கொள்ளலாம். விலைமனு தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளும் உரிமை திணைக்களப் பெறுகைக் குழுவிற்கு உரித்தாவதுடன், இவ்வறிவித்தலில் அல்லது மாதிரிப் படிவங்களில் குறிப்பிடப்படும் அல்லது குறிப்பிடப்படாத இப் பெறுகை தொடர்பான ஏதேனும் விடயங்கள் தொடர்பாகத் தீர்மானிக்கும் உரிமை வனசீவராசிகள் திணைக்களத்தின், பணிப்பாளர் நாயகத்திற்கு உரித்தாகும்.
8. விலைமனுக்களை, தயாரிப்பதற்கான எவ்வித செலவினங்களிற்கும், திணைக்களப் பெறுகைக்குழுத் தலைவர் பொறுப்பேற்கமாட்டார்.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக்குழு,
வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்
இல. 811/ஏ, ஜயந்திபுர வீதி, பத்தரமுல்ல.

விலைமனுக்களுக்கான அழைப்பு

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

2022/2023ம் வருடங்களில் பாதுகாப்புச் சேவைகளை வழங்குவதற்கான கேள்வி அழைப்பு

கேள்வி இல. Q 252/22

01. ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைக்கான பாதுகாப்புச் சேவைகளை வழங்குவதற்காக இத்துறையில் அனுபவம் வாய்ந்த அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை 2022-07-14ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கிறார்.

02. கேள்வி கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான கேள்வி கோரல் மூலம் நடைமுறைப்படுத்தப்படும்.

03. 2022-07-12ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு,ப. 9.00 மணிக்கும் பி.ப. 3.00 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் மீளளிக்கப்படாத கேள்வி வைப்பாக 3500.00 ரூபாவை (ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை) கணக்காளருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட ரசீதை (ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை) பெறுகை முகாமையாளருக்குச் சமர்ப்பித்து கேள்வி நிபந்தனைகள் மற்றும் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

04. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களை நுகேகொட, தலபத்பிட்டிய, ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை வழங்கல் அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் மேற்படி முகவரியில் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

தொடர்பு இலக்கங்கள்: தொ.பே. 0112778624 மற்றும் 0112778610 (நீடிப்பு: 3142, 3143) தொலைநகல்: 011-2778624 மின்னஞ்சல்: suppliceofficesjgh@gmail.com

05. பூரணப்படுத்தப்பட்ட இரு நகல்களிலான கேள்வி ஆவணங்களை 2022-07-14ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், பெறுகைக் குழு, ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை, தலபத்பிட்டிய, நுகேகொட எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அல்லது ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் தலைவரின் அறைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் நேரில் கொண்டு வந்து உள்ளிடலாம்.

தலைவர் - பெறுகைக் குழு,
ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,
தலபத்பிட்டிய,
நுகேகொட.

சிறுமியை தங்க வைத்திருந்த இளைஞனுக்கு விளக்கமறியல்

ரொட்டவெவ குறூப் நிருபர்

திருகோணமலை கோமரங்கடவல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வீட்டுக்கு தேடி வந்த 13 வயது சிறுமியை வீட்டில் தங்க வைத்த இளைஞரை எதிர்வரும் 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

திருகோணமலையில் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் நேற்று ஆஜர்படுத்திய போதே இக் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இளைஞன் அதே பகுதியைச் சேர்ந்த 19 வயது உடையவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அனுராதபுரம் மதவாச்சி பகுதியில் வசித்து வந்த 13 வயது சிறுமியை கையடக்கத் தொலைபேசியில் பேசி காதலித்து வந்த நிலையில் அச்சிறுமி தனது காதலனை தேடி வந்த போது அச்சிறுமியை சிறுமியின் உறவினர்களுக்கு தெரியாது வீட்டுக்கு அழைத்து சென்று தங்க வைத்ததாக தெரிவித்து குறித்த இளைஞர் கைது செய்யப்பட்டதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்ட சிறுமி தற்போது திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் கோமரங்கடவல பொலிஸார் தெரிவித்தனர்.

மின்சாரம் தாக்கி இளைஞன் மரணம்

அக்கரைப்பற்று வடக்கு, அக்கரைப்பற்று மத்திய தினகரன் நிருபர்கள்

அக்கரைப்பற்று முதலாம் குறிச்சியைச் சேர்ந்த அப்துல் காதர் சாபிக் அபான் (16 வயது) இளைஞன் மின்சாரம் தாக்கி உயிரிழந்த பரிதாபகரமான சம்பவம் அக்கரைப்பற்றில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இச்சம்பவம் புதன்கிழமை (22) மாலை அக்கரைப்பற்று நூறானியா வட்டாரத்தில் உள்ள வீட்டில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

அக்கரைப்பற்று நூறானியா வட்டாரத்தில் உள்ள நபரொருவரின் வீட்டில் சக நண்பர்களுடன் வர்ணம் (பெயின்ட்) பூசிக்கொண்டிருந்த வேளையில் வீட்டுக்கு அருகிலுள்ள மின்கம்பியில் எதிர்பாராத விதமாக கைபட்டதினால் மின்சாரம் தாக்கி தூக்கி ஏறியப்பட்டு அவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார்.

பின்னர் ஏனையவர்களின் உதவியுடன் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பிரேத பரிசோதனையின் பின் குடும்பத்தாரிடம் நல்லடக்கத்திற்காக ஜனாஸா ஒப்படைக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

'என் இனிய பட்டாம் பூச்சிக்கு' கவிதை நூல் வெளியீட்டு விழா

பௌர்ணமி கலை இலக்கிய நிகழ்வுத் தொடரின் 43 வது நிகழ்வாக மகுடம் கலை இலக்கிய வட்டம் நடாத்தும் வி. மைக்கல் கொலினின் 'என் இனிய பட்டாம் பூச்சிக்கு'கவிதைத் தொகுப்பு வெளியீட்டு விழா ஞாயிற்றுக்கிழமை மாலை 3.45 மணிக்கு மட்டக்களப்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் மட்டக்களப்பு தமிழ்ச்சங்கத் தலைவர் வி. றஞ்சிதமூர்த்தியின் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டச் செயலாளர் க. மகேசன்,கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம் ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்துகொண்டு விழாவை சிறப்பிக்கவுள்ளனர்.கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் மாகாண பணிப்பாளர் இரா. நெடுஞ்செழியன் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ளும் இந் நிகழ்வில் நூலின் முதற் பிரதியை மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் குணசிங்கம் சுகுணன் பெற்றுக் கொள்வார்.நயவுரையை கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவக சிரேஷ்ட விரிவுரையாளர் க. மோகனதாசன் ஆற்றவுள்ளார்.

வெளியீட்டுரையை எழுத்தாளர் ச. மணிசேகரனும் வரவேற்புரையை மட்டக்களப்பு மாவட்ட தமிழ் எழுத்தாளர் சங்க பொருளாளர் கதிரவன் த. இன்பராசாவும் நன்றியுரையை மகுடம் வி. மைக்கல் கொலினும் நிகழ்த்தவுள்ளனர். (ஸ)

மட்டு. மாவட்டத்தில்

அரச உத்தியோகத்தர்களுக்கு பெற்றோல் விநியோகம்

மட்டக்களப்பு குறூப் நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் எவ்வித தங்குதடையுமின்றி அரச உத்தியோகத்தர்களுக்கு பெற்றோல் வழங்கப்பட்டு வருகின்றது.

மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரனின் வழிகாட்டலில் பிரதேச செயலக ரீதியாக எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பிரதேச செயலாளர்களினால் அட்டைகள் வழங்கப்பட்டு குறித்த அட்டடைகளுக்கு பொற்றோல் விநியோகிக்கப்பட்டது.

ஆரையம்பதி பிதேசத்தில் பலநோக்கு கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பல்வேறு அரச திணைக்களங்களில் கடமை புரியும் உத்தியோகத்தார்கள் மிக நீண்ட வரிசைகளில் நின்று பெற்றோலைப் பெற்றுக் கொண்டனர்.

கொழும்பு மாநகர சபை

விலைக்கோரல்/ கேள்விகளுக்கான அழைப்பு

தகுதியும் தகைமையுமுள்ள கேள்விதாரர்கள்/விலைமனுதாரர்களிடமிருந்து பின்வரும் பொருட்கள்/சேவை வழங்கல்களுக்காக பொறியிடப்பட்ட கேள்விகள் கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளரால் அழைக்கப்படுகின்றன.

தொ. இல.	கேள்வி இல.	விபரம்	கேள்விதாரர்கள்/ விலைமனு தாரர்களின் தகைமை	மீளளிக்கப் படாத கேள்வி / விலைமனு ஆவணக் கட்டணம்	விலைமனு முறி/ பிணை பெறுமதி ரூபா
1.	CPD21/ 1400/2022	ஊழியர் போக்குவரத்திற்காக பஸ்களை வாடகைக்கமர்த்துதல்	வர்த்தகப் பதிவுடன் இந்த வகையான வழங்கல்கள்/ சேவைகளில் அனுபவத்தை பெற்ற வழங்குநர்கள்/ சேவை வழங்குநர்கள்	ரூபா 5,600.00	50,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி
2.	CPD13/ 440/2022	கொழும்பு நகர எல்லைக்குள் உள்ள மாநகர சபை இடப்பரப்புகளுக்கான ஜெனிட்டோரியல் சேவைகள் • முகத்துவாரம் தெற்கு மருந்தகம் - சுகாதார குணப்படுத்தல் திணைக்களம் • சென் மேரிஸ் பொழுதுபோக்கு மண்டபம் மற்றும் சனசமூக நிலையம் - விளையாட்டு மைதானத் திணைக்களம்		ரூபா 5,600.00	• 15,000.00 ரூபாவுக்கான • 90,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி
3.	CPD16/ 1246/2022	வாகனங்கள் மற்றும் இயந்திராதிகளுக்கான காப்புறுதி		ரூபா 5,600.00	200,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி

விலைமனு ஆவணங்களை (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி) இரண்டு முறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

முறை 01 - கொழும்பு மாநகர சபையின் இணையதளத்திலிருந்து (www.colombo.mc.gov.lk) தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.

i. மீளளிக்கப்படாத விலைமனு ஆவணக் கட்டணத்தை பின்வரும் வகையில் செலுத்துதல் வேண்டும்.

அ) எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் மக்கள் வங்கி நகர மண்டப கிளையில் பேணப்படும் 167-1-001-6-3169425 எனும் கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கலாம்.

ஆ) கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் கொடுப்பனவு கருமபீடங்களில் வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை செலுத்தலாம்.

- **வட்டார அலுவலகம் 04,**
  இல. 147, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, கொழும்பு 06.
- **வடிகாலமைப்பு மற்றும் நீர் வழங்கல் பிரிவு,**
  மாளிகாகந்த, கொழும்பு 10.

ii. பற்றுச்சீட்டு / வங்கி வரவுத் துண்டை விலைமனு ஆவணங்களுடன் கட்டாயம் இணைத்தல் வேண்டும்.

முறை 02 - நகர மண்டப வளவில் பெற்றுக்கொள்ளலாம்.

அ. ஒவ்வொன்றிற்கும் மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணக் கட்டணத்தை 2022-07-06ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையும் நகர மண்டப காசாளர் கருமபீடத்திற்கு செலுத்தி மற்றும் எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-07, நகர மண்டபம், கொழும்பு மாநகர சபை, மத்திய பெறுகை திணைக்கள அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆ. விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணங்கள் 2022 ஜூலை 06ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்குப் பின் வழங்கப்படமாட்டாது / இணையதளத்தில் பெற்றுக்கொள்ள முடியாது.

இ. நிபந்தனையற்ற கோரும்போது பெறத்தக்கதான விலைமனு முறி/ பிணை கேள்விமனுக்கள்/ விலைமனுக்கள் மூடப்படும் திகதியிலிருந்து 150 நாட்கள் வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைமனு முறி/ பிணை 2022.12.03ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைக்கோரல்கள் 2022.11.03ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

ஈ. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளில் கொழும்பு-07, நகர மண்டபம், செயலாளரின் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2022 ஜூலை 07ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் உள்ளிடல் வேண்டும்.

உ. 2022 ஜூலை 07ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி/ விலைமனு ஏற்றுக்கொள்வது முடிவுறுத்தப்படும் என்பதுடன் இறுதி நேரத்திற்கு பின் கிடைக்கப்பெறும் கேள்வி/ விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதோடு அதன் பின்னர் கேள்வி/ விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். இந்த நாள் பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டால், அடுத்து வரும் வேலை நாளில் 10.00 மணிக்கு கேள்வி/ விலைமனுக்கள் மூடப்படும். கேள்வி/ விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் பங்கேற்பதற்கு கேள்விதாரர்கள்/ விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுவர். 0112-686389, 0112-686369, 0112-662329 என்ற தொலைபேசி இலக்கங்களில் தலைமை கணக்காளர் (பெறுகை) அவர்களிடமிருந்து மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஊ. 5.0 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட கேள்வி/ விலைமனுக்களைக் கொண்ட கேள்விதாரர்கள்/ விலைமனுதாரர்கள் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்திற்கு அமைய பொது ஒப்பந்தப் பதிவுடன் பதிவு செய்த பின் PCA (3) ஆவணத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

ரோஷனி திசாநாயக்க - சட்டத்தரணி
மாநகர ஆணையாளர்
கொழும்பு மாநகர சபை.

National PVC

அறிவிப்பு

சென்ரல் இண்டஸ்ரீஸ் பிஎல்சி (PQ-121) ஆண்டு பொதுக்கூட்டம்

சென்ரல் இண்டஸ்ரீஸ் பிஎல்சி ("கம்பெனி") வருடாந்த பொதுக் கூட்டம் (AGM) 2022 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 19 ஆம் திகதியன்று காலை 11.00 மணிக்கு மெய்நகர் தளம் மூலம் நடத்தப்படும் என அறியதருவதோடு, இக்கூட்டமானது 2022 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 24 ஆம் திகதியன்று நடைபெற்ற வணிக திட்டமிடப்பட்ட கூட்டத்தின் அறிவிட்டு பிரகாரம்.

கூட்டத்தின் லிபரங்கள், நிகழ்ச்சி நிரல், பதிலி விண்ணப்பம் மற்றும் பதிவு விண்ணப்பம் ஆகியவற்றினை கொழும்பு பங்குச் சந்தையின் இணையத்தளம் **(https://www.cse.lk/pages/company-profile/company-component.html?symbol=CIND.N0000)** மற்றும் நிறுவனத்தின் இணையத்தளம் **(http://nationalpvc.com)** ஆகியவற்றில் பார்வையிடலாம்.

பங்குதாரர்கள் கூட்டத்தில் பங்கேற்க விரும்பினால் இணையத்தளத்திளுள்ள விண்ணப்பத்தினை பூர்த்திச் செய்து **corporateservices@corporateservices.lk** என்ற மின்னஞ்சல் விண்ணப்பதிற்கு கூட்ட ஒழுங்கு நேரத்தின் முன், அதாவது 48 மணித்தியாளங்களுக்கு முன் அனுப்பி வைக்குகமாறு கேட்டுக் கொள்ளப்டுகிள்றிர்கள்.

மேலும் 2022 ஆம் ஆண்டு மே மாதம் 27 ஆம் திகதியன்று நிருபிக்கப்பட்ட கொழும்பு பங்குச் சந்தையின் 2022 ஆம் ஆண்டு சுற்றறிக்கை எண் 4 இன் பிரகராம், அச்சிடட்பட்ட ஆண்டு அறிக்கையின் விபரங்களுக்கு திரு. விராஜ் களுஆராச்சி - 0707314021 அல்லது திரு. சுமித பெர்னாண்டோ - 0707314052 ஆகியோரை தொடர்புக் கொள்ளவும்.

வாரியத்தின் ஆனைப்படி, சென்ரல் இண்டஸ்ரீஸ் பிஎல்சி

கார்பரேட்ர் சர்வீசஸ் (பிரைவேட்) லிமிடெட்
செயலாளர்கள்/பதிவாளர்கள்

2022 ஜூன் 24 ஆம் நாள்

Central Finance Group

காத்தான்குடி வீட்டில் இளைஞனின் சடலம் மீட்பு

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள காத்தான்குடியில் இளைஞர் ஒருவரின் சடலமொன்று புதன்கிழமை மீட்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

காத்தான்குடி 3 குதா வீதியிலுள்ள வீடொன்றிலேயே குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது. 23 வயதுடைய பதுர்தீன் சுபைக் அகமட் எனும் இளைஞனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞன் நேற்றிரவு தூக்கத்துக்கு சென்றவர் காலை தூக்கத்திலிருந்து எழுப்பாத நிலையில் இவர் மரணமடைந்துள்ளதாக தெரிய வருகிறது.

இதையடுத்து உறவினர்கள் காத்தான்குடி பொலிசாருக்கு அறிவித்ததையடுத்து காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கதுமிந்த நயனசிறியின் வழிகாட்டலில் காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி ஏ.எஸ்.எம்.ரஹீம் தலைமையில் சென்ற பொலிஸார் ஆரம்பக் கட்ட விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதையடுத்து காத்தான்குடி பொலிசார் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி பீட்டர் போலின் கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்து குறித்த வீட்டுக்கு சென்ற நீதவான் சடலத்தை பார்வையிட்டதுடன் உறவினர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டார்.

இதன் விசாரணைகளை காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி ஏ.எஸ்.எம்.ரஹீம் நெறிப்படுத்தினார்.

இது தொடர்பாக காத்தான்குடி பொலிசார் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சடலமாக மீட்கப்பட்ட குறித்த இளைஞர் கடந்த 40 தினங்களுக்கு முன்னர் மட்டக்களப்பு சிறைச்சாலையில் விளக்க மறியலில் இருந்து பிணையில் விடுதலையாகி இருந்தார் எனவும் தெரிய வருகிறது.

வீட்டில் வைத்திருந்த பெற்றோல் தீப்பிடித்ததில் இளம் யுவதி பலி

மண்டூர் நிருபர்

கரடியனாறு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நெல்லுச்சேனை பிரதேசத்தில் பாவனைக்கு வைத்திருந்த பொற்றோல் தீப்பிடித்ததில் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பிய் இளம் யுவதி பலியான சம்பவம் நேற்று முன்தினம் (22) இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாடசாலை வீதி நெல்லுச்சேனை பிரதேசத்தை சேர்ந்த (19) வயது நற்குணம் கஜேந்தினி என்பவரே இந்த விபத்தில் பலியானவராவார்.

ஆரையம்பதி தனியார் ஆடைத்தொழிச்சாலையில் பணிபுரிந்து வரும் குறித்த யுவதி தனது வீட்டில் மின்வெட்டு காரணத்தினால் விளக்கினை எடுத்துச்செல்லும் போது தவறுதலாக விளக்கு கீழே விழுந்ததில் பாவனைக்காக வீட்டில் வைத்திருந்த பொற்றோல் போத்தலில் தீப்பிடித்ததில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வீடு திரும்பிய நிலையில் குறித்த யுவதி வீட்டிலிருந்தவாறு மரணமானதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

கரடியனாறு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் பணிப்பின் பேரில் சம்பவ இடத்திற்குச் சென்ற பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம்.நசீர் சடலத்தை பார்வையிட்டதுடன் சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்திய பின்னர் உறவினர்களிடம் ஒப்படைத்தார். மேலதிக விசாரணைகளை கரடியனாறு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

சீட்டு பணம் பிரச்சினையில் மூவருக்கு வெட்டுகாயங்கள்

ரொட்டவெவ குறூப் நிருபர்

திருகோணமலை உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கன்னியா பகுதியில் சீட்டு பணம் குறித்த நேரத்தில் வழங்கப்படாமையினால் சகோதரர்கள் இருவருக்கிடையில் ஏற்பட்ட கைகலப்பில் மூவர் காயமடைந்த நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கன்னியா மாங்காய் ஊற்று பகுதியிலேயே நேற்று (23) இவ்வனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது சகோதரர்கள் இருவர் மாதாந்தம் சீட்டு சேர்க்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகவும் குறித்த நேரத்தில் அக்காவிடம் தங்கை சீட்டுக்கு செலுத்தவேண்டிய பணத்தை கொடுக்காமையினால் இருவருக்கிடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை அக்காவின் கணவர் கோபம் கொண்ட நிலையில் தங்கையின் கணவரை கத்தியால் வெட்டியதாகவும் அதனை விலக்க சென்ற சக நண்பர்கள் இருவரும் கத்தி வெட்டுக்கு இலக்கானதாகவும் தெரியவருகின்றது.

குறித்த சம்பவத்தில் மூவர் வெட்டுக் காயங்களுக்கு உள்ளான நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலை விபத்து சேவை பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

தென் மாகாண கல்வி அமைச்சு

விலைமனு அழைத்தல்

கணனி மற்றும் துணை உறுப்புக்களைக் கொள்வனவு செய்தல்

பொதுக் கல்வி மறுசீரமைப்பு செயற்றிட்டத்தின் (GEMP) கீழ் மாகாண, வலய கல்வி அலுவலகங்கள் மற்றும் பாடசாலைகளிற்குப் பெற்றுக்கொடுப்பதற்காக கீழ்க்காணப்படும் கணனி மற்றும் ஏனைய உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக, தென் மாகாண கல்வி அமைச்சின் பெறுகைக் குழுத் தலைவரினால், தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் முறைமையின் கீழ், தகைமையுள்ள வழங்குநர்களிடமிருந்து, 2022.07.18 அன்று பி.ப. 2.00 வரை முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

தொடர் இலக்கம்	விபரம்	எண்ணிக்கை	மீளளிக்கப் படாத படிவக் கட்டணம் ரூபா	விலைமனுப் பிணைத் தொகை ரூபா
01	டெஸ்க் டொப் கணனிகள் (Core i3)	100	3500.00	280,000.00
02	UPS இயந்திரங்கள்	100		
03	டெப்லட் கணனிகள்	300	3500.00	265,000.00
04	ஸ்மார்ட் போர்ட் (Smart Board)	20	3500.00	165,000.00

(தொழில்நுட்ப விபரக்குறிப்புக்கள் மற்றும் ஏனைய விபரங்கள் விலைமனுப்படிவங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

02. 2022.06.23 முதல் 2022.07.15 அன்று பி.ப. 3.00 வரை பெறுகைப் படிவங்கள் வழங்கப்படும். இவ்வமைச்சின் சிறாப்பருக்கு 2022.07.15 அன்று பி.ப. 3.00 இற்கு முன்னர், மீளளிக்கப்படாத படிவக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டைப் பிரதான கணக்காளரிடம் சமர்ப்பித்து விலைமனுப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

03. 2022.07.18 அன்று பி.ப. 2.00 வரை விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதுடன், அன்றைய தினம் பி.ப. 2.30 இற்கு அமைச்சின் கேட்போர் கூடத்தில் விலைமனுத்திறக்கப்படும். அவ்வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரின் அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

04. உங்கள் விலைமனுக்கள், 2022.07.18 அன்று பி.ப. 2.00 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு, செயலாளர், தென் மாகாணக் கல்வி அமைச்சு, தரைமாடி, தக்ஷினபாய அமைச்சுக் கட்டிடத் தொகுதி, லபுதுவ, என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அல்லது அன்றைய தினம் அதே நேரத்திற்கு முன்னர் இவ்வமைச்சின் கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்த்தல் வேண்டும்.

05. விலைமனுக்களை அடக்கும் தபாலுறைகளின் இடது பக்க மேல் மூலையில், பெறுகை விபரங்களின் பிரகாரம், விலைமனுச் சமர்ப்பிக்கும் உபகரணத்தின் பெயர் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

06. விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்திலிருந்து ஒரு கிழமைக்குள் கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்படுவதுடன், இரண்டு (02) கிழமைகளிற்குள் வழங்கல்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். நாட்டின் நடப்பு நிலைமைகளின் பிரகாரம், தற்பொழுது தொகைகளை வைத்துள்ள நிறுவனங்களிடமிருந்து கொள்வனவு செய்யப்படல் வேண்டுமென்பதனால், மேற்படி மொத்த தொகைக்காகவும் அல்லது பகுதி யொன்றிற்காகவாவது விலைமனுச்சமர்ப்பிக்கும் இயலுமை உண்டென்பதுடன், அவ்வாறு சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களும் கவனத்திற் கொள்ளப்படும்.

07. இது தொடர்பான மேலதிக விபரங்களை, 0775048106/ 0912242776 என்ற தொலைபேசி இலக்கங்களின் மூலம் அல்லது acc.moesp@gmail.com என்ற மின்னஞ்சல் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

08. விலைமனு முன்னோடிக்கூட்டம், 2022.07.11 அன்று மு.ப. 11.30 இற்கு இவ்வமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

ரஞ்ஜித் யாப்பா,
செயலாளர்.
கல்வி, காணி அமைச்சு,
தென் மாகாணம்.
2022.06.23

NLDB

தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபை

பெறுகை அறிவித்தல்

தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபைக்குரித்தான பண்ணைகளுக்கு விலங்குணவு மூலப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக உள்நாட்டு விலங்குணவு உற்பத்தி மூலப்பொருட்கள் வழங்குநர்களிடமிருந்து பின்வரும் காலஎல்லைக்கு இயைபாக முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

கால எல்லை - 2022 ஆகஸ்ட் மாதம் 01ஆம் திகதி முதல் 2022 செப்டெம்பர் மாதம் 30ஆம் திகதி வரை

விலங்குணவு வகைகள்	தேவையான அளவு (மெ. தொன்)	விலைக்கோரல் பிணை முறியின் பெறுமதி (ரூபா)
சோளம்	203	406,000.00
தென்னம் புண்ணாக்கு	351.5	277,685.00
பருப்புத் துகள்	40	72,000.00
உடைந்த அரிசி	60	78,000.00
சோயா அவரை	47	192,700.00
அரிசி மினுக்கி	80	80,000.00
அரிசித் தவிடு (எண்ணெய் அற்றது)	280	214,200.00
அரிசித் தவிடு	39	15,600.00
பாம் கெர்னல் உணவு (Palm Kernel Meal)	10	5,500.00
பருப்பு கோது	10	7,000.00
மீன் உணவுகள் (Fish Meal)	02	10,000.00
தென்னம் மண்டி புண்ணாக்கு (Coconut Sediment Poonac)	05	6,500.00
மரக்கறி புரதம் - PL 68 (Vegetable Protein)	02	8,000.00

தேவையான விலங்குணவு அளவு, விபரக்குறிப்புகள் (Specifications) மற்றும் நிபந்தனைகளை உள்ளடக்கிய விலைமனுப் படிவங்களை கடமை (வேலை செய்யும்) பின்வரும் முகவரியிலுள்ள தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபையின் வழங்கல் முகாமையாளருக்கு வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் பெற்றுக்கொள்ளலாம். ஒரு விலைமனுப் படிவத்திற்கு 5,000.00 ரூபா வீதம் மீளளிக்கப்படாத வைப்பொன்று அறவிடப்படும்.

2022 ஜூலை மாதம் 12ஆம் திகதி பி.ப. 3.30 மணி வரை விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் என்பதுடன் 2022 ஜூலை மாதம் 14ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவுறும் என்பதுடன் அந்நேரத்திற்கு பின் கொழும்பு 05, நாவல வீதி, நாரஹென்பிட்டி, 40ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

தலைவர், பெறுகைக் குழு,
தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபை,
இல. 40, நாவல வீதி,
நாரஹென்பிட்டி,
கொழும்பு 05.
தொ.பே. இல. 011 2501701/2, 011 5746308

அறிவித்தல்

உள்ளூராட்சி நிறுவன வாக்கெடுப்புச் சட்டம் (262ஆம் அதிகாரம்)

2012ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன வாக்கெடுப்பு (திருத்தச்) சட்டத்தின் திருத்தப்பட்ட உள்ளூராட்சி நிறுவன வாக்கெடுப்புச் சட்டத்தின் 66எ சகிதம் வாசிக்க வேண்டிய 66இ அத்தியாயத்தின் கீழ் செய்யப்படும் அறிவித்தல்

உள்ளூராட்சி நிறுவன வாக்கெடுப்புச் சட்டத்தின் (262வது அதிகாரம்) மூலம் திருத்தப்பட்ட 2012ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன வாக்கெடுப்பு (திருத்தப்பட்ட) சட்டத்தின் 66எ சகிதம் வாசிக்க வேண்டிய 66இ அத்தியாயத்தின் விதிமுறைகளின் பிரகாரம் வடமத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளராகிய நூபே ஹேவகே ரோசி ஆகிய எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் வடமத்திய மாகாணத்தின் அனுராதபுரம் மாவட்டத்தில் திரப்பனே பிரதேச சபையில் வெற்றிடமாகவுள்ள உப தலைவர் பதவிக்கு உப தலைவரொருவரை தெரிவு செய்து நியமித்துக்கொள்ளும் செயற்பாட்டிற்கான கூட்டம் 2022-07-08ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு திரப்பனே சபை கூட்ட மண்டபத்தில் இடம்பெறும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

உள்ளூராட்சி ஆணையாளர்,
வடமத்திய மாகாணம்.

2022-06-22,
அனுராதபுரத்தில் அமைந்துள்ள
வடமத்திய மாகாண உள்ளூராட்சித் திணைக்களம்.

இலங்கை கட்டளைகள் நிறுவனம்

தொழில்நுட்பவியல் மற்றும் மூலதன ஊக்குவித்தல் அமைச்சின் கீழானது

பாதுகாப்பு சேவைகளை வழங்குவதற்கான அழைத்தல் - 2022/23

பின்வரும் அமைவிடங்களிலுள்ள அதனது கட்டிட தொகுதிகளுக்கு பாதுகாப்பு சேவைகளை வழங்குவதற்காக ஒப்பந்தக்காரரொருவரை தெரிவு செய்வதற்காக விலைமனுக்கோரல்களை இலங்கை கட்டளைகளை நிறுவனமானது அழைக்கின்றது.

அ) கொழும்பு-08, எல்விட்டிகல மாவத்தை, விக்டோரியா பிரதேசம் 17 ஆம் இலக்கத்திலுள்ள
பிரதான கட்டிடம்.

ஆ) கொழும்பு-08, எல்விட்டிகல மாவத்தை, விக்டோரியா பிரதேசம் 17 ஆம் இலக்கத்திலுள்ள
ஆய்வுகூட சேவைகள் கட்டிடம்.

இ) கொழும்பு-08, எல்விட்டிகல மாவத்தை, விக்டோரியா பிரதேசம் 15/2 ஆம் இலக்கத்திலுள்ள
குத்தகைக்கு பெறப்பட்ட கட்டிடம் (பிரதான கட்டிடத்திற்கு முகப்பாகவுள்ளது)

ஈ) கொழும்பு-08, எல்விட்டிகல மாவத்தை, விக்டோரியா பிரதேசம் 04 ஆம் இலக்கத்திலுள்ள
குத்தகைக்கு பெறப்பட்ட கட்டிடம் (பிரதான கட்டிடத்திற்கு முகப்பாகவுள்ளது)

உ) கொழும்பு-08, பொறளை, டட்லி சேனாநாயக்க மாவத்தை 02 ஆம் இலக்கத்திலுள்ள குத்தகைக்கு பெறப்பட்ட கட்டிடம்.

2022.06.27 ஆம் திகதியிலிருந்து 2022.07.11 ஆம் திகதி வரையும் 2,000 இலங்கை ரூபா + பெசேவ ஆகியவற்றை மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்திய பின்னர், வார நாட்களின் அலுவலக நேரங்களில் இலங்கை கட்டளைகள் நிறுவன நிருவாகத்திற்கான பணிப்பாளரிடமிருந்து விலைமனுக்கோரல் படிவங்கள் மற்றும் விபரங்களையும் கையேற்றுக் கொள்ளலாம்.

விலைமனுக்கோரல்கள் 2022.07.12 ஆம் திகதியன்று பி.ப. 2 மணி வரையும் ஏற்றுக் கொள்ளப்படும்.

பணிப்பாளர் நாயகம்,
இலங்கை கட்டளைகள் நிறுவனம்,
இல.: 17, விக்டோரியா பிரதேசம்,
எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு-08.
தொலைபேசி: 0112 671567-72

இலங்கை துறைமுக அதிகார சபை

விலைமனு அறிவித்தல்

அகற்றிக்கொள்ளப்படாத கப்பல் சரக்குகளை விற்பனை செய்தல்

விலைமனு இலக்கம் : 446

விலைமனு நடைமுறைப்படுத்தப்படும் தினம் : 2022.07.06

கொழும்பு துறைமுகக்களஞ்சியங்கள் மற்றும் முற்றங்களில் வைக்கப்பட்டுள்ள பின்வரும் பண்டங்களைக் கொள்வனவு செய்து அகற்றிக்கொள்வதற்காக, முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விலைமனு இலக்கம் : 446

பாவனையிலிருந்து அகற்றப்பட்ட இயந்திரங்கள்
பலகை அறுக்கும் இயந்திரங்கள்
பாவனையிலிருந்து அகற்றப்பட்ட சக்கர நாற்காலிகள்
பலகைகள் (Sawn Timber)
வெற்றுக் கொள்கலன்கள்
Hydrochloric Acid
வாகன உதிரிப்பாகங்கள் இரும்பு
உணவுப்பதார்த்தங்கள்
மின் உபகரணங்கள்
Valve Guard
உரம்
Venneers
துணி வகைகள்
உப்பு
சப்பாத்துக்கள்
Secondary Interior Doors
மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள்
இரசாயனப் பதார்த்தங்கள்
சமையலறை உபகரணங்கள்
பாவித்த ஆடைகள் மற்றும் ஏனைய வர்த்தகப்பதார்த்தங்கள் போன்றவை.

மீளளிக்கப்படாத ரூபா 1,000/- இற்கான தொகையை மற்றும் பெசேவ ஐச் செலுத்தி, கெனல் முற்றம், இலக்கம் 15, லோட்டஸ் வீதி, கொழும்பு -1 இல் அமைந்துள்ள இலங்கை துறைமுக அதிகார சபையின் சேவை வழங்கல் பிரிவின் விற்பனைப்பிரிவு அலுவலகத்தில் 2022.06.28 அன்று 10.00 மணி முதல் 2022.07.05 அன்று 14.30 மணி வரை இதற்கான விலைமனுப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களிற்காக (www.slpa.lk) என்ற இணையத்தளத்திற்குப் பிரவேசிக்கவும்.

பிரதான முகாமையாளர் (சேவை வழங்கல்)
2022.06.24ஆம் திகதி
இலங்கை துறைமுக அதிகார சபை,
சேவை வழங்கல் பிரிவு,
இல. 15, லோட்டஸ் வீதி, கொழும்பு-01.

சுத்திகரிப்பு மற்றும் பூங்காப் பராமரிப்பு நடவடிக்கைகள்

மாத்தளை மாவட்ட செயலகப் பெறுகைக்குழுத் தலைவராகிய என்னால் பின்வரும் சேவைகளை வழங்குவதற்காக 2022.07.15 அன்று பி.ப.02.00 வரை வழங்குநர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

செயற்றிட்டம்	மீளளிக்கப் படாத படிவக் கட்டணம் ரூபா	மீளளிக்கப்படும் விலைமனுப் பிணைத் தொகை
மாத்தளை மாவட்ட செயலகப் புதிய நிருவாகக் கட்டிடத்தொகுதி, பழைய மாவட்ட செயலகக் கட்டிடம், எம்.சீ.வீதி பயிற்சி நிலையம், மாவட்ட செயலக உத்தியோக இல்லம் மற்றும் அதன் வளாகம் சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்பு	1500.00	50000.00

